எண்திங்களிற்கு ஒருமுறை

இதழ் - 02

# வெளி

மாற்றத்தின் ஆரம்பம்...



"பேசப்படும் சொல்லை விட எழுதப்படும் சொல்லே வலிமை வாய்ந்தது"

மார்கழி 2016

20/-



- நவம்பர் ஒரு பார்வை
- யுத்தம் தந்த பரிசு - சிறுகதை
- அரச பணி ஓர் அறிமுகம்....
- இலங்கையின் முதன்மைகள்
- ஓர் வரலாற்று ஆய்வு

MSS
வழங்கும்
இலவச நாட்காட்டி


"டிஜிற்றல் உலகில் என்றும் உங்கள் நண்பன்"

Mahaa's Digital



பனர்
ஸ்ரிக்கர்
நேம் போட்
லைட் போட்
கலர் பிரின்ரிங்

024 4545036
077 9906981





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி

## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து....

முயற்சி செய்து தோற்றோர் என இவ்வுலகில் எவருமில்லை. முயற்சியின் விளைவே ஆற்றல் ஆளுமை அனுபவம் என்பன எம்மை வந்தடைகிறது. முயற்சிதான் மெய் வருந்தக்கூலி தரும் என்ற வாக்கின்படி சிறியதொரு இடைவெளியின் பின் வெளியின் இரண்டாவது இதழில் சந்திப்பதில் மகிழ்வடைகின்றோம்.

எம்மண்ணில் இருந்து வெளிவரும் இம்முயற்சிக்கு நீங்கள் வைத்திருக்கும் எதிர்பார்ப்பும் எண்ணங்களும் எந்த வகையிலும் வீண் போகாதவாறு அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை

மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு புத்தகம் என்று விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டன் குறிப்பிடுகிறார். ஆனால் தற்போது இக் கண்டுபிடிப்பை சமூகமயப் படுத்த வேண்டிய தேவையுள்ளது.

வாசிப்பு என்பது இயந்திர கதியில் நிகழும் செயலல்ல ஆனால் மாறாக தற்போது வாசிப்பு அவ்வாறு ஆகிவிட்டதே என்பது ஆச்சரியப்படக்கூடியது

அவ் வகையில் இவ் விதழும் எமது சமூதாய வளர்ச்சிக்கு பக்க துணையாய் விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை

**ஆலோசகர்**
இரா.புஷ்பகாந்தன்
(பேராசிரியர்)

**இரண்டாம்பதிப்பு**
மார்கழி 2016

**இதழாசிரியர்**
ஜெ.சுலக்ஷன்

**விளம்பரமுகாமை**
நி.முகிந்தன் MSS

**விற்பனை முகாமை**
நி.சேரலவன் MSS

**உதவி**
த.பகீரதன்
க.சசிகரன்
ந.அருளானந்தன்

**பக்க வடிவமைப்பு**
ப.லதீப்
க.கிருஷாந்
ப.பிரதீப் assistia


**அச்சுப்பதிப்பு**
பகீரதன் அச்சுப்பதிப்பகம்
கற்குழி, வவுனியா.
024 222 1491

**தொடர்புகளுக்கு**
024 2050492
veliyouth2016@gmail.com
#187/10, ஆலடி வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ammu

## BEAUTY CARE & ACADEMY (PVT) LTD.



**Our Services**

25% OFFER
- Beauty therapy daily services,
- Hair Dressing daily services,

15% OFFER
- Bridal Dressing

**Our Courses**

15% OFFER
- Diploma in Beauty Courses
- Diploma in Beauty Culture
- Short Couses ( Beauty Therephy, Bridal Dressing, Hair Stylining)
- Self Makeup Classes
- Beauty Courses ( 1 Month )
- Beauty Courses (2 Months)

Offer Date: Dec 15 to Jan 15

No- 66, Station Road, Vairavapuliyankulam, Vavuniya
Phone 0773825658, Land Phone 024 2225352




JOYFOTOGRAPHY

# RELOOKS

PHOTOGRAPHY, VIDEO & PRINTING HOUSE

## PHOTOGRAPHY & VIDEO FILMING

FOR WEDDING, BIRTHDAY, PUBERTY CEREMONY FASHION, CORPORATE & PRODUCTS

**SPECIAL OFFER !!!**

**10,000/=** DISCOUNT FOR 2017 BOOKING

OFFER VALID TILL 30TH JAN 2017

தொலைபேசி:
**0771315386**
கோவில் வீதி, குருமண்காடு
(குருமண்காடு காளி கோவிலுக்கு முன்னால்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - වවුනියාව
# மாவட்டச் செயலகம் - வவுனியா
# DISTRICT SECRETARIAT - VAVUNIYA


ආයතන අංශය | தாபனப்பிரிவு | ESTABLISHMENT BRANCH

පොදු / பொது / General - 024-2222233
දිසාපති / அரசாங்க அதிபர் / Govt.Agent -024-2222235
අතිරේක දිසාපති / மேலதிக அரசாங்க அதிபர் / Addl.Govt.Agent - 024-2222203
පරිපාලන නිලධාරී / நிர்வாக உத்தியோகத்தர் / Administrative Officer - 024-2222106
ෆැක්ස් / தொலைநகல் / Fax - 0242222212
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - gavavuniya@gmail.com
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Web Site - www.vavuniya.dist.gov.lk


මගේ අංකය / எனது இல / My No - GA/VA/PA/GEN

ඔබේ අංකය / உமது இல / Your No -

දිනය / திகதி / Date - 2016.12.05

## வவுனியா மாவட்டச் செயலாளரின் ஆசிச்செய்தி

"வெளி" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இச் சஞ்சிகையின் ஆக்கங்கள் உண்மையில் வாசகர்களுக்கு பல்வேறு விதமான அறிவார்ந்த கருத்துக்களை சுமந்து வருவதோடு, சிறந்த கவிதைகள், கட்டுரைகள், அறிவுத்துணுக்குகள் ஊடாக வாசகர்களது மொழிவளம் மற்றும் அறிவுத்திறனை தீட்டுவதற்கும் நாளாந்தம் எழுத்தாக்கத்துறையில் ஆர்வம் காட்டும் ஆர்வலர்களுக்கும் அவர்களது ஆக்கங்களை பகிரங்கப்படுத்துவதற்கும் ஒரு களமாகவும் அமைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இளம் சமுதாயம் ஒரு வட்டத்தினுள் நின்றுவிடாமல் தூர சிந்தனையோடு செயற்பட இச் சஞ்சிகை வழிவகுக்கும் என நான் நம்புகின்றேன். இச் சஞ்சிகை மாதாந்தம் வெளிவர ஒத்துழைப்பு வழங்கும் "வெளி" சஞ்சிகைக் குழுவினரை பாராட்டுவதுடன் எனது மனமுவந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

எம்.பி.ஆர்.புஷ்பகுமார,
மாவட்டச் செயலாளர்,
வவுனியா.

எம்.பி.ஆர்.புஷ்பகுமார
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
வவுனியா.

"The best reward for us is the appreciation of service receiver"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கருத்து



நல்ல முயற்சி, நியமங்களிற்கமைய
பிரசுரிக்க வேண்டிய தேவைகள்
ஏராளம் உள்ளன.
இன்னும் அனுபவம் அதிகம் தேவை.

வாழ்த்துக்கள்.
உதவி பிரதேச செயலாளர்
(வவுனியா பிரதேச செயலகம்)

தங்களின் வெளி இதழின் வாசகனானதையிட்டு மிகவும் மகிழ்வடைகிறேன் தங்களது இம்முயற்சியைக் கண்டு பூரிப்படைகிறேன். இவ்விதழில் எனது பாடசாலையின் வரலாறு கண்டேன் மேலும் கவிதைகள், கட்டுரைகள், சிறு கதை என்பனவும் காணப்பட்டபோதிலும் இதழின் அட்டைப்படத்தில் விளம்பரத்தை தவிர்த்திருக்கலாம் என்பது எனது கருத்தாகும். தொடர்ச்சியாக இதைவிட பலமாறுபட்ட பல ஆக்கங்களுடன் வரும் என்பதனை எதிர்பார்க்கின்றேன். தொடர்ச்சியாக வவுனியாவில் வெளிவந்த பல சஞ்சிகைகளைப்போல் மறைந்துவிடாமல் வெளிவர வாழ்த்துக்கள்.



S.வினோதினி
தவசிகுளம்,
வவுனியா.

வவுனியாவில் வெறும் விளம்பரத்தை மட்டுமே சுமந்து நிறுவனக்களை ஏமாற்றி வரும் விளம்பர சஞ்சிகைகளுக்கு மத்தியில் வாசகர்களுக்கு தரமான ஆக்கங்களுடன் வெளிவரும் வெளி சஞ்சிகையின் வளர்ச்சிக்காக குழுவினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

N.புவிகரன்
வைரவபுளியங்குளம்,
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையார் பெருங்கதையும் கஜமுகாசூரன் போரின் தத்துவமும்

உலகிலே தோற்றம் பெற்ற மதங்களுக்குள் மிகவும் ஆதிகால மதமாக போற்றப்படுவது இந்து மதமாகும். இந்து மதத்தவர்கள் தங்களுடைய ஆன்மீக ஈடேற்றம் கருதி விரதங்களையும் கடைப்பிடிக்கின்றனர். இவ்விரதங்களுக்குள்ளே விநாயகர் சஷ்டி எனப்படும் பிள்ளையார் கதை விரதமும் போற்றுதற்குரியது.

விநாயகர் சஷ்டி விரதம் கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை (முதலாம் நாள்) தொடக்கம் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி (ஆறாம் நாள்) வரை உள்ள இருபத்தொரு தினங்கள் அனுஷ்டிக்கப்படுவதாகும்.

இவ்விரத நாட்களில்

"கரும்பும் இளநீருங்காரெள்ளும் தேனும் விரும்பும் அவல் பலமும் மேற்மேல் - அருந்திக் குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீக்குங் கணபதியே இக்கதைக்கு காப்பு"

என்று காப்பு செய்யுட் பாடப்பட்டு

"திருவாசகஞ் செய்கருமங்கை கூட்டு செஞ்சொற் ஆதலால் வானோடும் ஆனை முகத்தானைக் காதலாற் உப்புவர் தம் கை"

என்ற விநாயகர் துதியோடு பெருங்கதை படிக்கப்படும்.

இவ்விரதத்தை மேற்கொள்பவர்கள் விரத தொடக்க நாளில் இருபத்தியொரு இழைகள் கொண்ட காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் அணிந்து கொள்ளல், முதலிரு தினங்களும் ஒரு பொழுது நண்பகலில் உணவு உண்ணலும் இரவில் பால் பழம் உண்ணலும் நாள்தோறும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம், எள்ளுருண்டை என்பவற்றை நிவேதனம் செய்தல், இறுதி தினத்தில் உபவாசம் இருத்தல், பாரணைத்தினத்தில் காலைப்பொழுதில் அவதானமாக காப்பை அணிவித்தல். பாரணையின்போது அடியவர்கள் உறவினர்களுடன் சேர்ந்து உணவு உட்கொள்ளல் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவ்வாறான இப்பிள்ளையார் கதையின் இறுதி நாள் கஜமுகாசூரன் போர் இடம்பெறுகின்றமை தர்மங்கள் நிலைநாட்டப்படும் அதர்மங்கள் அழிக்கப்படும் எனும் தத்துவத்தை எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

M.M. ரதன் B.A
(சிரேஷ்ட இந்துநாகரிக துணை ஆசிரியர்)
ஐடியல் - வவுனியா

சிறுவர்களுக்கான பிரத்தியேக சிங்கள வகுப்புக்கள்
සිංහල Class
மாதமொன்றிற்கு ரூபா 500/= மட்டுமே....
தொடர்புகளுக்கு-077 065 9932



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் ஒரு பார்வை

## 01.11.2016

வற் எனப்படும் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி என்பன இன்று முதல் அமுலுக்கு வருகின்றன. வற்வரி அதிகரிப்பு காரணமாக மதுபானத்தின் விலையினை உயர்த்துவதற்கு மதுபான நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. வற்வரி அதிகரிப்பானது,சிகரட், மதுபானம், தொலைபேசி சேவைகள், இலத்தரனியல் சாதனங்கள், வாசனைத் திரவியங்கள், ஆபரணங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகள் என்பவற்றில் தாக்கம் செலுத்தும்.

## 04.11.2016

வவுனியா நகரசபையின் புதிய செயலாளராக இராசையா தயாபரன் நியமனம்.



## 08.11.2016

- அமெரிக்காவின் 58வது ஜனாதிபதி தேர்தல் இன்று.
- நள்ளிரவு தொடக்கம் இந்தியாவின் 500 ரூபா மற்றும் 1000 ரூபா நாணயத்தாள்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி அறிவித்திருந்தார். நிதி ஊழல் மோசடிகளை தடுக்கம் வகையிலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இந்திய அரசு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 10.11.2016

70 ஆவது பாதீடு இன்று நாடாளுமன்றத்தில்..

- 250 மில்லியன் செலவில் களனி பல்கலைக்கழகத்தில் e-learning வசதி
- மாணவர்களுக்கு ஸ்மார்ட் வகுப்பறை வசதியை பெற்றுக் கொடுக்க 4,500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்க மேலதிகமாக 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- தொழில்சார் கல்வி அபிவிருத்துக்கி 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- காவல்துறை போதைபொருள் ஒழிப்பு பிரிவுக்கு 150 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தனியார் பேருந்துகள் இரவு 11 மணிவரையில் சேவையில் ஈடுபட இணக்கம் வெளியிட்டுள்ளன.
- இணைய மூலமான பரிமாற்றங்களுக்கு வரி அறவிடப் படவுள்ளது.
- இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மாவிற்கான சுங்க வரி 100 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளது.
- 2017ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதியில் இருந்து அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சேமிப்பு கணக்கொன்றை திறப்பதற்கு வணிக வங்கிகளின் இணக்கம்..

## 03/11/2016

- கடன் தொகையை திருப்பி செலுத்த முடியபமல் தாயொருவர் தனது குழந்தையுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று வவுனியா சின்னக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது
- இலங்கையின் 2017 கான வரவுசெலவு திட்டம் நாடாளுமன்றத்தில் 110 மேலதிக வாக்குகள்ல் நிறைவேற்றம்

## 05.11.2016

- பண்டித் அமரதேவவின் பூதவுடல் அக்னியுடன் சங்கமம்
- இந்தியாவில் நாடு முழுவதும் உள்ள 11 ஆயிரம் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் புதிய ஜனாதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்



## 11.11.2016

ருகுனு பல்கலைக்கழகத்தில் டீசல் கண்டுபிடிப்பு!!

தேய்காய் உள்ளீட்டு சக்கை மற்றும் பாசி ஆகியவற்றை பயன்படுத்தி டீசல் உற்பத்தி செய்ய முடியும்என்றுகண்டறியப்பட்டுள்ளது.

## 14.11.2016

68 ஆண்டுகளின் பின்னர் இன்றைய தினம் வழமைக்கு மாறாக பாரிய நிலவை காண்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை கோள் மண்டலம் தெரிவித்துள்ளது. இந்த நிலவு வழமைக்கு மாறாக 14 மடங்கு பெரிதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று இரவு 7.30 மணியளவில் இந்த நிலவை காண முடியும்.

இந்த நிலவு சாதாரண நிலவைவிட 30 மடங்கு பிரகாசமாக ஒளிரும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15.11.2016**

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முறையாக ஏழு அடி உயரமான கஞ்சா செடி மீட்கப்பட்டுள்ளது.

**19/11/2016**

- புதிய அரசியல் அமைப்பு உருவாக்குவது தொடர்பான மேற்பார்வை குழுவிற்கு முன்வைக்கப்படவுள்ள, துணைக் குழுக்களின் 6 அறிக்கைகள் அரசியல் அமைப்பு சபை சார்பில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் ஏற்று கொள்ளப்பட்டன.
- மலேசிய அரசாங்கத்திற்கு எதிராக ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

**21.11.2016**

- போக்குவரத்து விதிகள் தொடர்பான ஆறு குற்றங்களுக்கு அபராதத் தொகை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப் படவுள்ளது.

  இதன்படி

  01.மதுபோதையில் வாகனம் செலுத்தல்,

  02.வாகன காப்புறுதி இன்மை,

  03.வாகன சாரதி அனுமதிபத்திரம் இன்மை,

  04.அதிகரித்த வேகம்,

  05.இடதுபக்கத்தில் வாகனத்தை முந்திச் செல்லல் ,

  06.பாதுகாப்பற்ற தொடருந்து கடவைகளில் வாகனம் செலுத்துதல்.
- இந்நாட்டில் கருப்பு பணத்தை வைத்திருப்பவர்களை வெளியில் கொண்டு வர 5000 ரூபாய் நாணயத்தாளை தடைச்செய்ய வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் , பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

**24.11.2016**

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன நியமனம்

**28.11.2016**

சர்வதேச கடல் மாநாடு இன்று

**17/11/2016**

- இலங்கையிலிருந்து புகலிடம் கோரும் நோக்கில் "மெக்ரா" கப்பலில் அவுஸ்திரேலியா சென்று, பின் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு, அங்கு குடியமர்ந்த அஜிதன் யுவராஜன் மரணம்
- கிளிநொச்சியில் எலிக்காச்சல் காரணமாக ஒருவர் மரணமடைந்துள்ளதாக மாவட்ட வைத்தியசாலைத் தகவல் தெரிவிக்கின்றது

**20.11.2016**

- முச்சக்கரவண்டி ஓட்டுனர்களின் வயது எல்லையை 18 வயதில் இருந்து 25 வயதாக உயர்த்தப்படவுள்ளது.
- போக்குவரத்து ஒழுங்கு மீறலுக்கு எதிராக ஆகக்குறைந்த அபராதம் இரண்டாயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இலங்கையின் வீதிகளை கடவைகளை கடக்கும் மஞ்சள் கடவைகளின் நிறம் மாற்றப்படவுள்ளது.
- முன்னாள் பிரபல நடிகர் விமல் குமார டி கொஸ்தா காலமானார்.

**22.11.2016**

அரச காணி ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் 1050 அடையாள அட்டைகள் மீட்பு

**23.11.2016**

- நுண்கலை பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக சனத் நந்தசிறி நியமனம்
- அரிசியின் விலை அதிகரிப்பு



**26.11.2016**

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ மறைவு

தொகுப்பு : ஜெ.சுலக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதன்மைகள்

## சுதந்திர இலங்கையின் முதலாவது

- பிரதமர் – D.S.சேனநாயக்கா
- ஜனாதிபதி – வில்லியம் கோபல்லாவ
- நிறைவேற்றதிகார ஜனாதிபதி – J.R. ஜெயவர்தன
- பெண் பிரதமர் – ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 1962-07-02
- முதலாவது பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து உரையாற்றியவர் -2ம் எலிசபெத் மகாராணி.
- ஆங்கிலேய ஆளுனர் – பிரெட்றிக் நோர்த்
- பெண் மாகாணமுதலமைச்சரும் பெண் ஜனாதிபதியும் – சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க
- தேர்தல் மூலம் தெரிவான முதல் ஜனாதிபதி – J.R.ஜயவர்தன
- தேசாதிபதி – சேர் ஒலிவ் குணவர்தன
- சபாநாயகர் – சேர் பிரான்ஸிஸ் மொலமுரே
- தமிழ் மொழியில் வெளியான பத்திரிக்கை – உதயதாரகை -1841
- சிங்கள மொழியில் வெளியான பத்திரிக்கை – சிங்களஹட
- ஆங்கில மொழியில் வெளியான பத்தரிக்கை த கொழும்பு ஜேனல்
- தமிழ்த்துறை பேராசிரியர் – சுவாமி விபுலானந்தர்
- சிங்கள இராச்சிய முதலாவது தலைநகரம் – அநுராதபுரம்
- புகையிரதபாதை – கொழும்பு-கண்டி
- அரசியல் கட்சி – தேசிய காங்கிரஸ்
- அரசி – அனுலா
- தொழிற்சங்கத்தை உருவாக்கியவர் – A.E. குணசிங்க
- சர்வதேச தரம் வாய்ந்த மாநாட்டு மண்டபம் - BMICH - பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம்.
- சுதந்திர வர்த்தக வலயம் – கட்டுநாயக்க
- தொலைக்காட்சி சேவை – சுயாதீன தொலைக்காட்சி- 1981
- தமிழ் மொழியில் ஒலிபரப்பை வழங்கிய தனியார் வானொலி- FM99
- தேசாதிபதி – சேர் பிரட்றிக் நோர்த்-1798 - 1805
- அரச வர்தமானி வெளியிடப்பட்டது – 1802-03-15
- தேசிய அடையாள அட்டை /NIC வழங்கும் முறை அறிமுகமானது -1972
- இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது -1950
- ஐ.நா. சபையில் உறுப்புரிமை பெற்றது -1955
- பண்டா- செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது -1957-07-26
- டட்லி -சேனாநாயக்க ஒப்பந்தம் கைச்சாத்தானது - 1965
- தேயிலை செய்கை ஆரம்பிக்கப்பட்டது - 1839-கலாநிதி கினேசர்
- அஞ்சல்சேவை அறிமுகப்படுத்தப்பட்டது - 1832 /பிரித்தானியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் மீது ஊடகங்கள் செலுத்தும் தாக்கம்



சிறுவர் என்பது 18 வயதிற்கு உட்பட்ட அனைவரையும் கருதும். சிறுவர்களின் பருவங்களில் கட்டிளமை பருவம் மிகவும் முக்கியமானதாகும். முன்பு இருந்த சிறுவர்கள் போல் தற்போதைய சிறுவர்கள் இல்லை எனவும் அவர்கள் பெரியோரை மதிப்பதில்லை, வன்முறையான போக்கு கொண்டவர்களாக காணப்படுவதுடன், போதைப்பொருள், மது பாவனைக்கு அடிமையானவர்கள் என்ற குற்றச்சாட்டு உள்ளது. உண்மையிலேயே இந்த குற்றச்சாட்டுக்கு காரணம் யார்? சிறுவர்கள் எப்போதும் மற்றவர்களிடமிருந்தே பழக்கவழக்கங்களை பெற்றுக் கொள்கிறார்கள். சிறுவர்களிற்கு நல்ல குடும்பச்சூழல் மற்றும் சமுகசூழல் காணப்படுமானால் அவர்கள் நல்லமுறையில் வளர்வதற்கு வாய்ப்பாக அமையும்.

ஆனால் நடைமுறையில் அவ்வாறு உள்ளதா? இன்று குடும்பத்தில் தாய், தந்தை தமது பிள்ளைகளுக்கு முன்னால் தமது முரண்பாடுகளை வெளிக்காட்டுகின்றார்கள். அத்துடன் பிள்ளைகள் சூழலில் இருந்து பெற்றுக்கொள்கின்ற விடயங்கள் அவர்களின் நடத்தையை தீர்மானிக்கின்றது. அந்த வகையில் ஊடகங்களின் பங்கு மிகவும் முக்கியமாகும். இன்று ஒரு சிறு குடிசை வீட்டிலும் தொலைக்காட்சி, வலைத்தட்டு (DISH-TV ) இணைப்பு என்பன காணப்படுகின்றது. ஊடகங்களில் தொலைகாட்சியின் பங்கு மிகவும் அதிகமாகும். தொடர்ச்சியாக 24 மணிநேரமும் திரைப்படங்களை காண்பிக்கும் அலைவரிசைகள் தொடர்நாடகங்கள் என்பன தற்போது தொலைகக்காட்சிகளில் அதிகளவில் தொடர்ச்சியாக ஒளிபரப்பாகின்றது.

இன்றைய சினிமாக்கள் அதிகம் வன்முறை, மது அருந்துபவராகவும் மற்றும் புகைப்பிடிப்பவராகவும் நடிகர்கள் சித்தரிக்கப்படுகின்றார் சிறுவர்கள் குறிப்பாக கட்டிளமை பருவத்தினரின் முன்மாதிரியாக சினிமா கதாநாயகர்களே காணப்படுகின்றனர் ஆகவே இலகுவாக சிறுவர்கள் இந்த வன்முறையைக் கலாச்சாரத்திற்கு உள்வாங்கப்படுகின்றனர். மது மற்றும் புகைத்தல் பொருட்களை தயாரிக்கும் நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களை உருவாக்குவதற்கு சிறுவர்களையே இலக்கு வைக்கின்றனர்.

எனவே சிறுவர்களுக்கு பிடித்தமான சினிமா கதாநாயாகர்களுக்கு பணத்தினை கொடுத்து தமது மது சார்ந்தபொருட்களை திரைப்படங்களில் நடிகர்களை பாவிக்கச் செய்கின்றனர். இதனை பார்க்கின்ற பல சிறுவர்கள் மது மற்றும் புகைத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட தூண்டப்படுகின்றனர் தொலைக்காட்சி போல கணினி, தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் போன்றவையும் சிறுவர்களுக்கு தேவையற்ற விடயங்களை வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

சிறுவர்களுடைய நலன் மற்றும் அபிவிருத்தியில் அனைத்து தரப்பினருக்கும் பொறுப்புள்ளது. எனவே ஊடகங்களை சேர்ந்தவர்கள் தமது வியாபாரத்தில் மட்டும் கவனம் செலுத்தாமல் எதிர்கால சந்ததியான சிறுவர்களையும் அவர்களது நலன்களையும் கருத்தில் கொண்டு செயலாற்றுமானால், ஒரு ஆரோக்கியமான வன்முறைகள் மற்றும் மதுபாவனையற்ற இளைஞர் சமுதாயத்தை உருவாக்க முடியும்.சிறுவர் உரிமையில் கூறப்பட்டுள்ள ஓர் முக்கியமான விடயம் தகவல் பெறும் உரிமையாகும். தமக்கு வேண்டிய தகவல்களைபெற்றுக்கொள்ளும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு. ஆனால் அத்தகவலை அவர்களுக்கு பொருத்தமானதாகவும் அவர்களது வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு அவசியமாகவும் இருத்தல் வேண்டும். சிறுவர்களும் தமது உரிமையை மட்டும் கருத்தில் கொள்ளாது தமது கடமையையும் கருத்திற்கொண்டு செயற்பட்டால் நல்ல எதிர்கால தலைவர்களை இந்நாடு பெற்றுக்கொள்ளும்.

த. செல்வக்குமரன்
மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம உத்தியோகரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள்.

- உங்களுடைய வதிவை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழொன்றை இலவசமாக வழங்குதல். இதற்காக அச்சிடப்பட்ட மாதிரிப்படிவமொன்று பயன்படுத்தப்படும்.
- உங்களுடைய பெயரை அல்லது உங்களது குடும்பத்தில் உள்ள ஒருவரின் பெயரை வாக்காளர் இடாப்பில் வருடாந்தம் சேர்த்துக்கொள்ளுதல்.
- உங்களுடைய தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளுதல். மற்றும் ஒப்படைத்தல்.
- பொதுசன உதவித்தொகை / நிவாரண உதவி விண்ணப்பங்கள் பரிந்துரைக் கடிதங்களை தயாரித்தல் / பிரதேச செயலாளரிடம் சமர்ப்பித்தல்.
- ரூ.5000/= உச்சம்வரை பெறுமதியுள்ள சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுதல்.

பின்வரும் மாதிரிப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளுதல்
- மரங்களை வெட்டுவதற்கான உத்தரவுப்பத்திர விண்ணப்பப்படிவம்
- தற்காலிக நிவாரண உதவி விண்ணப்ப படிவம்
- வருமான சான்றிதழ் விண்ணப்படிவம்
- வியாபாரப்பெயரைப் பதிவுசெய்யும் விண்ணப்ப படிவம்
- பொதுசன உதவித்தொகை விண்ணப்படிவம்

- உங்கள் பிரதேசத்தில் நிகழ்கின்ற குற்றச்செயல் அல்லது வேறு குற்றச் செயலொன்று தொடர்பாக முறைப்பாடு செய்தல். கிராம உத்தியோகத்தர் பொலிஸ் அதிகாரமுள்ள உத்தியோகத்தர் என்பதால் அப்பணிகளைச் செய்ய அதிகாரம் உண்டு.

  கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிறப்பு மற்றும் இயற்கை மரணத்தைப் பதிவதற்கான அடிப்படைப் பணிகளைச்செய்தல்
- பல்வேறு தேவைகளுக்காக விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் சான்றிதழ் பிரதிகளை சான்றுப்படுத்திக் கொள்ளுதல்
- பிரிவில் திடீர் மரணங்கள் நிகழ்கின்றபோது கடமைகளை செய்வித்துக் கொள்ளுதல்

  காணியினை காப்புறுதி செய்கின்ற போது உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல்.
- முப்படை / பொலிஸ் உத்தியோகத்தர்களின் வீடமைப்புகொடுப்பனவு, ஓய்வூதிய கொடுப்பனவைச் செலுத்துதல் தொடர்பாகப் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.
- கிராமிய அடிப்படையில் சிவில் பாதுகாப்புக் குழுவுக்கு அங்கத்தவர்களை நியமித்தல்.

கிராம உத்தியோகத்தர்களை வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை,புதன்கிழமை,தவிர எஞ்சிய நாட்களில் மு.ப 8.30-11.00 க்கு இடையில் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் சந்திக்க முடியும். மற்ற நேரங்களிலும் நாட்களிலும் அவர்கள் வெளிக்கள வேலைகளில் ஈடுபடுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர்களின் அலுவலகங்களில் குறிப்பாக பேணப்படவேண்டிய ஆவணங்கள், பொருட்கள் விபரம்.

கிராம அலுவலர் பெயர்ப்பலகை.

விடுமுறை பெற்றுக்கொள்ளும் போது பதிற்கடமை ஒழுங்குக்கான கிராம அலுவலர் பெயர் விபரம், விடுமுறை பெறும் காலம் என்பன விளம்பரப்பலகையில் குறிப்பிடுதல் வேண்டும்.

கிராம அலுவலர் பிரிவு வரைபடம் துலக்கமாக மக்கள் பார்வைக்கு வைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

மாதாந்தம் குடித்தொகை விபரம் மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்

தினப்பதிவேட்டில் புத்தகம் உரிய தகவல் தினந்தோறும் எழுதப்பட்டு அடுத்தநாள் காலையில முதல்நாளுக்குரிய பக்கம் குறுக்கு கோடிடப்பட்டு கையெழுத்திடல் வேண்டும்.

கிராம அலுவலர் உத்தியோகபூர்வ இலட்சணையுடனும்அலுவலக சீருடையுடனும் கடமையில் இருத்தல் வேண்டும்.

அலுவலகம் அலுவலக வளவு என்பன பொதுமக்களை கவரும் வகையில் தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

அலுவலகத்தில் மக்களுக்கு இருக்கை மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

அரச பொருட்கள் பதிவேட்டுப் புத்தகம் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

பிரதான வீதியில் இருந்து உள்நோக்கி அலுவலகம் அமைக்கப்படிருக்குமாயின் அலுவலகத்தை சுட்டும் வகையில் வழிகாட்டிப்பலகை பிரதான வீதியிலிருந்து இடப்பட்டிருத்தல் வேண்டும்

-நன்றி-

தொடரும்.....

(நிர்வாககிராம உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம்,
வவுனியா.)

அடுத்த இதழில்

- .கிராம அலுவலகரின் தேர்தல் கடைமைகள்.
- கிராமத்தில் கிராம சேவக அலுவலகம் அமைய வேண்டிய விதம்
- வவுனியா மாவட்ட கிராமசேவகர் விபரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சே குவேரா எனும் மாமனிதனைத் தேடல்

**"சிந்திக்கும்போது நிதானமாக சிந்தியுங்கள், செயலாற்றும்போது மிகவும் உறுதியோடு செயற்படுங்கள், விட்டுக்கொடுத்தலின்போது மன நிறைவோடு விட்டுக்கொடுங்கள்"**



- சே குவேரா

என்னை நான் மனிதனாக செதுக்கிகொள்வதற்கு நான் அறிந்துக்கொள்ள அதிகம் ஆர்வம் காட்டிய மனிதர்களில் சே குவேரா எனும் மாமனிதர் மிகவும் முக்கியமானவர். எனக்குள் ஒருவரை திரும்ப திரும்ப தேடும் தீ பற்றிக்கொண்ட அதிக சந்தர்ப்பம் கார்ல்மாக்ஸ், ஈ.வே.ராமசாமி (பெரியார்) போன்றோருக்கு அடுத்து இவரைப் பற்றியதாகவே இருந்தது. ஏனெனில் என்னை நான் செதுக்கிகொள்வதற்கு நான் என்னை எந்த அளவுக்கு நேசித்தேனோ அந்த அளவுக்கு அவரையும் நேசித்தேன். அவரை பற்றிய தேடல் அதிகரிக்க அதிகரிக்க அவரின் மீதான நேசம் அதிகரிக்கவே செய்தது. அவரை நேசித்தவர்களில் நான் ஒரு துளி மாத்திரமே. ஏனெனில் அந்தளவுக்கு அவரை நேசிப்பவர்கள் உலகம் முழுவதும் இன்றும் பரவியுள்ளனர்.

தமது அடையாளம், சுய மனித கௌரவம் மற்றும் சுதந்திரத்தையும் நேசிக்கும் ஒவ்வொரு இளைஞனும் சே குவேராவின் வாழ்க்கையை தேடுகின்றபோது அவனுக்குள் உத்வேகமும் புத்தெளிச்சியும் தோன்றும். மனிதருள் மிக உயர்ந்த பணி எதுவெனில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவதுதான். ஆயினும் ஒரு நேர்மைமிக்கவனாக நீதி நெறி சார்ந்து அறநெறிசார்ந்து வாழ்ந்து காட்டுவது என்பது இலகுவானதல்ல. இது சவால்மிக்கது. எனினும் இதனை சாதிப்பது தான் இலட்சியம்.

இதற்கு ஓர் மிக உயர்ந்த எடுத்துக்காட்டு சே குவேரா எனும் எர்னஸ்டோ குவேரா டி லா செர்னா (Ernesto Guevara De La Serna). இவரை நான் தேடியதால்தான் இவ்வாறான சவால்களை இன்றும் நான் இலகுவாக எதிர் கொள்கிறேன். தூற்றுவோர்-தூற்றட்டும் என்று எனக்கென ஓர் இலட்சிய பாதையில் செல்வதற்கு சே எனும் புரட்சியாளன் பற்றிய தேடல் அதிக உத்வேகத்தையும் சுய நம்பிக்கையையும் தந்தது. இதனால் அவரது நினைவுகள் எமக்குள் போற்றப்பட கூடியதாகும். இளையோர் ஒழுக்க நெறியுடனான சமூக சிந்தனையையும் அதன்பால் இயங்குதலையும் இவரது தேடல்கள் தரவல்லது. தலைமைத்துவ ஆற்றல் சார்ந்த சிந்தனைகளை கொண்ட இவரது ஆழ்ந்த கருத்துக்கள் இளையோர் உள்ளத்தில் ஊடுரவசெய்வதோடு வல்லமை கொண்ட இவரது கருத்துக்கள் இவர்களை மனிதர்களாக செதுக்கும் உளிகளைப் போன்றது. நிறைவான மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை உணர்த்தும் ஒருவராகவே அவர் வாழ்ந்தார். ஆதலால்தான் பிரெஞ்சு அறிஞரான பால் சாத்ரே இவரை " பூமியில் வந்து போன மாமனிதர் சே" என்றார். அடி மட்ட மக்கள் சமூகத்தில் படிந்துக் காணப்படும் வாழ்வியலை புரிந்து அச்சமூகத்தின் எழுச்சிக்கு எவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவத்தை இளையோர் வழங்க வேண்டும் என்பதற்கு இவரது கருத்துக்கள் மிகவும் வீரியமிக்கவை. ஓர் சிறந்த தலைமைத்துவம் என்பது அசாதாரணமான ஒன்றை சாதாரணமாக மாற்றிக் காட்டுவதே ஆகும். சேயிடம் இந்த மன உறுதியை நீங்கள் காணலாம். இந்த மன உறுதியை அவரது ஒவ்வொரு செயலிலும் காண முடிகிறது. இந்த மன உறுதிக்கான தன்நம்பிக்கை அளப்பரியது.

இந்த மகத்தான மனிதனை இன்றைய இளைஞர்கள் கற்றறிய வேண்டியதன் அவசியம் யாதெனில் அவரது வாழ்க்கையும் இதில் படிந்திருந்த உண்மைகளும்தான். அவரை உயர்த்தியது கூட அவரது ஆழ்ந்த தேடல்களும், அவரது வாழ்க்கையும் மற்றும் உயரிய நோக்குடைய பயணமும்தான். இன்று அனேகமான இளைஞர்கள் தமது டீசேர்ட் மற்றும் பனியன்களில் இவரை அலங்காரமாக போட்டுக்கொள்வதை விட சாலவும் சிறந்தது அவரை பற்றி அறிந்து அவர்காட்டிய உயர்ந்த வழிக்காட்டலை அகிம்சை ரீதியாக முன்னெடுப்பதன் ஊடாக தனக்கும் தனது சமூகத்துக்கும் ஓர் எடுத்துக் காட்டாக வாழ்வதுதான். அவரைப் பற்றி அவரே இவ்வாறு சொல்கிறார் எங்கு அநீதி நடைப்பெற்றாலும் அதைநோக்கி பயணித்தலே எனது கொள்கை, நோக்கம், வேலை யாவும். நீங்களும் இதன்பால் வருவீர்கள் என்றால் நீங்களும் என் தோழர்களே' என்றார். இதில் உண்மையான மக்கள் பணி எது என்பதற்கும் உண்மையான தொண்டர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதற்கும் இவரை ஓர் சிறந்த உதாரணமாக கொள்ளலாம். சே குவேரா போன்ற தன்னிகரற்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, இவரின் எடுத்துக்காட்டான வரிகள் இளையோரிடத்தில் தலைமைத்துவதற்கு ஓர் உந்துசக்தியாக அமைகிறது.

"எனக்கு வேர்கள் கிடையாது கால்கள்தான், எங்கெல்லாம் அடிமைத்தனம் இருக்கிறதோ அங்கெல்லாம் என் கால்கள் செல்லும்" என்ற அவரது கொள்கை இதற்கு நல்ல எடுத்துக் காட்டு. அவரது அறிவுரைகள் மிகவும் முக்கியமானது. 'எங்கேனும் கொடுமைகள் நடந்தால் அதற்காக வருத்தப் படுங்கள்' என்கிற அறிவுரை அனைத்து இளைஞர்களுக்கும் மிகவும் பொருத்தமானது. தற்போதைய நிலையில் சுயநலமும், நான் சரியென்ற போக்கும் நிறைந்து காணப்படும் நிலையில் இவரைப் போன்ற உயர்ந்த பொது நலவாதிகள் பற்றிய தேடல் இளைஞர்களுக்கு மிகவும் அவசியமானது. இளைஞர்களின் எண்ணங்களில் வீண்பொழுது போக்குகளும், களியாட்டங்களும் ஊடுருவும் இச் சூழலில் வாசிப்பு, தேடல்கள் என்பன மிக மிக அரிதாகவே காணப்படுகிறது. இது இளைஞர்களிடத்தில் இவர்களின் வலுவினைப் இழக்கசெய்வதோடு உடல் உள பாதிப்புக்களையும் ஏற்படுத்துகிறது. எனவே தீய பழக்கவழக்கங்களிலிருந்து விடுப்பட்டு தன் நம்பக்கையோடும், துணிவோடும் நேர்மையின் வழி செயற்பட சே குவேரா போன்றோர் பற்றிய வாசிப்பும் தேடலும் மிகவும் பயன்தரும்.

கலாநிதி. இரா. புஷ்பகாந்தன்
விரிவுரையாளர்
யாழ்பல்கலைக்கழக வவுனியா வளாகம்

"விதைத்துக்கொண்டே இரு
முளைத்தால் மரம்
இல்லையேல் உரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஒருநாள்
ஆறிரண்டு அகவைக்கு முன்
ஆறாத்துயரம் அரங்கேறிய நாள்.......
திருவிழாவிற்காக கூடியிருந்த உறவுகள்
மரண விழாக்கோலம் தரித்து
மனமதை உருக்கி
மண்ணினில் புதையுண்ட நாள் - நினைவிருக்கிறதா...?

எத்தனை பிஞ்சுகள்
எத்தனை இளசுகள்
கருவைச் சுமந்த கடவுள்களும் சரி
கண்போல் காத்த கடவுள்களையும் சரி
கனாவிலே பேசிய காதலர்களும்
மனதோடு பேசிய உறவுகளும்
ஈன இரக்கமின்றி உன்
கோரப்பசிக்கு இரையாகிய நாள் - நினைவிருக்கிறதா...?

அம்மா அம்மா என்று ஒருகுரல்
மகனே மகளே என்று பலகுரல்கள்...
கண் போகும் திசையெல்லாம்
கடல் சென்ற கணவன்
கண்முன்னே வருவானென்று
வரும் அழுகையை அடக்கி
கவலையுடன் கடல் நோக்கி
காத்திருக்கும் மனைவி மார்களும்...
காண்பதெல்லாம் கனவாய் இருக்ககூடாதா என்று
ஏங்கித்தவித்த எத்தனை உயிர்கள் - நினைவிருக்கிறதா..?

நம்பியவரை கலங்கவைக்கும் குணம்
மானிடர்களுக்கு மட்டுமே உள்ளதென்று நினைத்திருந்தேன்
இல்லை இல்லை உன்னிடத்திலும் உள்ளதென்று
அன்றுதான் அறிந்து கொண்டேன்...
உன்னையே நம்பி
நீயே கதியென்று
உனதருகில் அடைக்கலம் புகுந்தோருக்கு
மனதில் வடு அழியாப் பரிசு
அன்று நீ கொடுத்தது - நினைவிருக்கிறதா?

சுனாமி அடித்தோடி
அகதி முகாம்களில் அஞ்சி மீள்வதற்குள்
பினாமி அழிவுதந்து அலைக்கழிய வைத்தான்..
பாரிலே உன்னையே மலைபோல நம்பியோர்க்கு
அவ்வூரிலே சிலை போல உட்கார வைத்தாய்....
நீரிலே அடித்தோடி
அடங்கி மீள்வதற்குள்
போரிலும் இழந்தனர் உன்னருகில் அன்று
உனக்கும் உன் பாதியினருக்கும்
என்ன பிழை செய்தனர்....
பார்க்கும் இடமெல்லாம் - மிஞ்சியது
பாழடைந்த வீடுகளும் பனைமர வெளிகளும்தான் ....

-வன்னியூர் சேரன்-

தமிழர் திருநாள் இது
தமிழர்களின் வாழ்வை
வளமாக்கும் திருநாள் இது

உழைக்கும் உழவர்களின்
களைப்பை போக்கி
களிப்பில் ஆழ்த்தி
உற்சாகப்படுத்தும் திருநாள் இது...

உறங்கும் பெண்களை
அதிகாலையிலே எழுந்து
கோலம் போடவைக்கும்
கோலாகலமான திருநாள்...இது

கவலையனைத்தும் மறந்து
கழுவிஎடுத்த புதுப்பானையில்
கச்சிதமாய் களைந்தெடுத்த
கைக்குத்து அரிசிஎடுத்து
பொங்க வைக்கும் திருநாள் இது...

சேர்த்து வைத்த துன்பமும் சரி
வந்துசேர்ந்த கவலைகளும் சரி
விரட்டி வந்த பயமும்
மிரண்டு நின்ற மனதையும்
அத்தனையும் தீயிலிடு
மிரட்டி வரும் கவலைகளை
விரட்டி அடக்கும் வீர திருநாள் இது..

பழைய எண்ணங்களை அவிழ்த்து
புதிய சிந்தனைகளை புகுத்தும்
புதுமையான திருநாள் இது..

என் உடன்பிறவா தமிழ் மக்கள்
அனைவருக்கும் என்
உற்சாகமான பொங்கல்
நல்வாழ்த்துக்கள்...

- சுலக்ஷன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக்களம்

காலாற காற்று வாங்க மெதுவாய் நடந்தேன்
நீளக் காற்சட்டைக்காரன் நேரம் பாராமல் நிற்பந்திக்கிறான்
அறைக்கு செல்ல அறை கூவுகிறான் என்னை

என்ன செய்ய எல்லாம் என் விதி
புரியாத புதிர் இன்று
புதிய பெரிய அறையில் எனக்கான இடம்
இல்லை இல்லை எமக்கான இடம்

அறையில் எத்தனை பேர் என்னைப்போல்
அடுக்கடுக்காய் அமர்த்தப்பட்டு
இன்று நான் முன் வரிசை
எனக்கு நிம்மதி

மெதுவாய் தலையசைக்க பக்கத்து அறைக்காரன்
மென்மையாய் சிரிக்கிறான் எனைப்பார்த்து
ஏதேதோ அவன் காதில் வார்த்தைகள்
வாய்வழி வழிமாற்ற
நீளக்காற்சட்டைக்காரன் நேரே பார்க்கிறான் என்னை
என்ன செய்ய எல்லாம் என் விதி

அரைக்காற்சட்டையுடன் ஆயிரம் பேர் இருந்தாலும்
நீளக்காற்சட்டை போட்டு - சில
முத்திரைகள் நெஞ்சில் குத்திய
நூறு பேருக்கு மவுசு இங்கே
எல்லாம் என் விதி

தனி இடத்தில் இப்பேது நான்
அரட்டை அடித்தபடி என்னை அறையில்
பதம் பார்க்கும் ஓரிருவர் அங்கே.
நிருபிக்கப்பட்டுவிட முடியாத குற்றவாளிகள் அவர்கள்

அறையில் இன்று எனக்கு
அரை உயிர் போகும் போகட்டுமே
தனியறை விசாரணை இன்றி
தள்ளிப்போனாலே போதும்

இன்று விசேசம் போல
இனிப்புப் பண்டம் எல்லாம் என்
இருப்புக்கு முன்னே

நீளக்காற்சட்டை முன்னே நிரலில்
நிற்கின்றேன் நான்
காலை உணவிற்கு கையேந்தி
கால் கடுக்க நிற்கின்றேன் நான்
பாத்திரம் எதுவுமில்லை
பதற்றமாய்த்தான் உள்ளது எனக்கு

கைகளை சூடு பதம் பார்க்க
கண்களிலே அன்னை முகம்
காலையில்தான் சொன்னார் இன்று
நவராத்திரி கடைசி நாளாம்....

- நி.முகிந்தன்

## சீதனம்

ஆண்டாண்டு காலமாய்
ஆட்சி புரிகின்ற பெண்கள் வாழ்வில்
வேண்டாத விருட்சமாய் வளர்ந்து நிற்கும்
உழைத்து நிற்காத முதுகெலும்பற்ற
ஆண்கள் கேட்டிடும் பிச்சைக்காசு...

ஆயிரம் எண்ணங்கள் மனதோடு இருக்க
ஆவலோடு காத்திருக்கும் பெண்
இருமனம் சேரும் திருமணத்தில்
இணைவும் வேண்டுமா..? சீதனம்
மாணவரை கண்ட பெண்
மாங்கல்யம் பெறும் தருணம்
கோலத்தை மாற்றி விடுகின்ற
கொடிய புயலே சீதனம்...

அருகில் நின்று பார்த்த மச்சான்
உருகி உருகி அருகில் வர
சொந்தங்கள் கைகூடும் வேளைதனில்
வந்திடுமே சீதனம்

மறுவீடு போகும் பெண்ணின்
தாய் வீட்டை காலிசெய்யும்
மிகவும் கடுமைமிக்க
ஆயுதம் சீதனம்

காலங்கள் கழிந்தாலும்
கோலங்கள் மறைந்தாலும்
மாறாது இந்நிலை
மீண்டும் வருமோ வாழ்வு என்று
மாண்டு கிடக்கும் பெண்ணின்
வாழ்வை தட்டியெழுப்பும் நாள் எங்கே.....?

-ஜெயக்குமார் வனோஜா-
கல்மடு




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு தெரியுமா...?

## மாரடைப்பு

நடுமார்பில் வலி, மார்பில் இறுக்கிப்பிடித்திருப்பதைப்போல உணர்வு, மார்புப் பகுதியிலிருந்து இடது தோள்ப்பட்டை வரை வலி பரவுதல், பின் மார்பின் நடுப்பகுதியில்வலி ஏற்பட்டு கழுத்து வரைக்கும் பரவுதல், அதிக வியர்வை, வாந்தி, மயக்கம் போன்றன மாரடைப்புக்கான முக்கிய அறிகுறிகளாகும். அதிக பதட்டம் மன அழுத்தம் உள்ளவர்கள், புகை மது பழக்கம் உள்ளவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

## மறதி

இளமையில் மறதி என்பது வேறு ஆனால் அளவுக்கு அதிகமான மறதி முதுமையில் ஏற்படும். இதற்கு அல்ஸைமர் நோய் என்று பெயர். இந்த நோயைக்கட்டுப்படுத்தும் ஆற்றல் மஞ்சளுக்கு உண்டு. மேலும் கடுக்காய், நெல்லிக்காய், இஞ்சி ஆகிய உணவுப் பொருட்கள்வயதான பிறகும் நோய்கள் தொற்றாமல் பாதுகாக்கும். இதைவிட முக்கியம் உணவுக்கட்டுப்பாடு. சத்தான, மிதமான உணவுமுறை முதுமையில் மிக அவசியம்.

## புற்றுநோய்த்தடுப்பு

நாம் அன்றாடம் உணவில் சேர்த்துக்கொள்ளும் சில உணவுப் பொருட்களில் புற்றுநோயைக்குணப்படுத்தும் ஆற்றல் உள்ளது என கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உணவில் வெங்காயம், வெள்ளைப் பூண்டு சேர்ததுக் கொள்வோருக்கு புற்றுநோய் வருவதற்கு வாய்ப்புகள் குறைவு என மருத்துவத்தகவல் குறிப்பிடுகிறது. வெங்காயத்திலும் வெள்ளைப் பூண்டிலுமுள்ள "செலீனியம்" எனும் உலோகம் புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது.

## சிறுநீரகம்

பெரும்பாலாவவர்களுக்கு சிறுநீர்ப்பாதையில் நோய்த் தொற்று ஏற்படும். இதற்குக் காரணம் இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறை. சிறுநீர் வெளியேறும்போது எரிச்சல், கடும் மஞ்சள் நிறத்தில் வெளியேறுதல், புளிச்ச வாசனை, அதிக நுரை, அடிவயிற்றில் வலி ஆகியன இருந்தால் உங்களுக்கு சிறுநீரகக்கல் பிரச்சனை உள்ளது என்று அர்த்தம். வெளிறிய மஞ்சள் நிறத்தை தவிர்ந்து வேறுநிறத்தில் சிறுநீர் வெளியேறினால் உடனே மருத்துவரைஅணுகிப் பரிசோதித்துக்கொள்வது நலம் பயக்கும்.

## இரதத அழுத்தம்

இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் நாள்தோறும் காலையில் 1அவுன்ஸ் துளசிச்சாறெடுத்து பருகுவது நல்லது உடலில் தடைப்பட்டிருக்கும் இரத்த குழாய்களைத் துளசிச் சாறு அகலப்படுத்த உதவுகிறது. இதனால் இரத்த அழுத்தம் குறைந்துவிடும்.

## பல் ஈறு

பல் ஈறுகள் வீங்கி வலியால் துடிப்பவர்கள் படிகாரத்தைச் சிறிது தூளாக்கி வெந்நீரில் போட்டுக்கலந்து வாயைக் கொப்பளித்தால் வலி போன இடம் தெரியாது.

## தொண்டைப்புண்

தொண்டைப்புண் சளி போன்றவற்றால் அவதிப்படுவேருக்கு பனங்கற்கண்டு, சிறிது மிளகு, சிறிது சீரகம், விரலி மஞ்சள்துண்டு ஆகியன உதவும். மிளகு சீரகத்தை வறுத்துப்பொடி செய்துகொள்ள வேண்டும். ஒரு டம்ளர் தண்ணீரில் கொஞ்சம் மஞ்சளைப் பொடியாக்கிப் போட்டுவிட்டு மேற்கண்ட எல்லாவற்றையும் போட்டு தளதளவென்று கொதிக்க விட்டு இறக்கிய கசாயத்தில் சூட்டுடன் ஒரு டீஸ்பூன் வெண்ணையை சேர்த்து கலக்கி குடித்தால் தொண்டயை தொல்லைப்படுத்துகின்ற பிரச்சனைகள் நீங்கிவிடும்.

விஷேட பண்டிகைக்கால சலுகைகளுக்கு முந்துங்கள்
உங்களுக்கென சொந்தமாகவொரு
இணையத்தளம் வேண்டுமா.?
MSS
தொடர்புகளுக்கு : 076 728 0996 | 077 283 1809 | 077 914 8718


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளி இன் கன்னி வெளியீட்டின் போது.....



அரசாங்க அதிபர் அலுவலகத்தில்



பிரதேச செயலாளர் அலுவலகத்தில்



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலகத்தில்



உதவி பிரதேச செயலாளர் அலுவலகத்தில்



வவுனியா நூலகத்தில்



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WES
WORLD • EXPRESS • SERVICES

# WORLD EXPRESS SERVICE

## International & Local Courier Service



**துரித கதியில் குறைந்த செலவில் உங்கள் உறவினர் நண்பர்களுக்கு பொருட்களை அனுப்பிடலாம்.**



**பண்டிகைக்கால சிறப்பு விலைச்சலுகைகள்**

## எமது சேவைகள்

- உங்களின் பொதிகளை துரிதமாக உங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றிடலாம்.
- எந்தவொரு நாட்டிலும் உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு 3 அல்லது 4 வேலைநாட்களுக்குள் பொதிகளை ஒப்படைத்தல்.
- 10 கிலோவிற்கு மேற்பட்ட பொருட்களிற்கு விஷேட விலைக்கழிவுகள்.
- தேவை ஏற்படின் உங்கள் பொருட்களை உங்களின் இடங்களிற்கே வந்து பெற்றுக்கொள்ளப்படும்.

www.worldexpressservices.com
Hotline : 077 387 0952 | 011 434 5966

**#180/5, Station Road,**
**Vairavapuliyankulam, Vavuniya**
**024 4903 200**

Head Office : 011 2520 894
Negambo : 031 2224 544
Kotahena : 011 4574 586
Jaffna : 021 2220 356
Batticalloa : 065 2228 995
Mannar : 023 4924 031

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BIS British International School

2017ம் ஆண்டுக்கான புதிய அனுமதிகள் நடைபெறுகின்றது.

ENGLISH PRE - SCHOOL

செல்லச் சிறுசுகளுக்கான ஆங்கில ஆரம்பப் பாடசாலை

தமிழ் மற்றும் சிங்களம் ஒரு பாடமாக கற்பிக்கப்படும்

024-4929129

BIS LADIES COLLEGE

271, Mannar Rd, Vavuniya.
( பழைய பசுமை இல்லம் )

வட மாகாணத்தில் Diploma in Spoken

English

0777-596148

BRITISH COLLEGE OF EDUCATION

JAFFNA. TEL : 021-4927113
VAVUNIYA. TEL : 024-4930041
MANNAR. TEL : 023-4924124
MULLAITHIVU. TEL : 021-4927497


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கு பாதுகாப்பான இணையத்தேடலை ஏற்படுத்தல்.

Google.com

இன்றய உலகில் கற்றுக்கொள்வதற்கும் அறிவுத்தேடலுக்கும் முதல் தேவை இணைய இணைப்பும் இணைய தேடலும்தான். இதில் அபாயம் தரும் இன்னுமொரு பக்கமும் உள்ளது. முற்றிலும் கட்டற்ற இணையம் சிறுவர்களுக்கு அபாயகரமானது. பாலியல் தளங்களும் வன்முறையை போதிக்கும் தளங்களும் இணையத்தில் நிறைந்து கிடக்கின்றன. இவற்றை பார்க்காதே என்று ஒரு காவலாளி போல எந்நேரமும் கட்டுப்படுத்துவது இயலாது. மேலும் வரைமுறைகளை அமைப்பது இன்றைய டிஜிட்டல் உலகில் பெற்றோர்களுக்கும் சற்று சிரமமானதாக உள்ளது. இயலாததும் கூட.

பெற்றோர் தடை இடுகையில் அதனை மீறவேண்டுமென்ற இயல்பு சிறுவர்-களுக்கு இயல்பாகவே தோன்றுவது இயற்கையே. இந்தச் சூழ்நிலையை சமாளிக்க **k7 web protection** எனும் Programe நமக்கு உதவுகின்றது. இணைய-த்தில் இலவசமாகக்கிடைக்கும் இந்த Programe வீடுகளில் பயன்படுத்தும் கணனி-களில் கட்டுப்பாடுகளை விதிக்க உதவுகிறது. இதன்மூலம் கணனியை கட்டுப்பாட்டுடன் வைக்க முடியும். உங்கள் குழந்தைகளை இணையம் தரும் தீமைகளில் இருந்து பாதுகாக்க உதவும்.



இதன் சிறப்பம்சங்களாவன:
பாலியல், போதைமருந்து, தனிநபர் டேட்டிங், வன்முறையை போதிப்பது வெறுப்பினை வளர்ப்பது, இனவேறுபாட்டை தூண்டுவது என 70க்கும் மேற்பட்ட பல்வேறு பிரிவுகளாக இணைய தளங்களை பிரித்து வைத்து தடுக்கலாம்.

குழந்தைகளின் வயதின் அடிப்படையில் தடுப்பு நிலைகளை அமைக்-கலாம். அனைத்து தேடல் சாதனங்களிலும் safesearch என்ற ஒன்றை இயக்கி வைக்கலாம். குறிப்பிட்ட நேரத்தி இணைய தொடர்பினை ஏற்படுத்த இயலாமல் செய்-திடலாம்.எப்போதும் அனுமதி மற்றும் எப்போது தடை செய்திடு என்ற இருவகைகளாக இணையத்தளங்களை பிரித்து அமைக்கலாம். பெற்றோர் அமைத்திடும்கடவுச்சொற்களையும் மீறி இருக்கும் வகையிலும் அமைக்கலாம். கணனி தொழில்நுட்பம் சற்று அதிகம் தெரிந்து பயன்படுத்துபவர்கள் கூட மீட்டெடுக்கமுடியாத தடைகளை உருவாக்கலாம்.

தடை செய்யப்பட்ட தளங்களை-பார்ததால் அதுகுறித்து அறிக்கை தரும்படி அமைத்திடலாம். Windows மட்டுமன்றி Mac கணனிகளில் இயங்கும் வகையிலும் இது தரப்படுகிறது. k7 web protection என்ற இந்த program Microsoft Windows 7, Windows vista, Windows xp, Mac os10.4.7 மற்றும் அதற்கும் மேற்பட்ட இயங்குதளங்களில் இயங்குகிறது. இதனை தரவிறக்கம் செய்து நிறுவச்செய்திடுகையில் கடவுச்சொல் தரும்படி இந்த program கேட்கும். இவ்வா-றான செயற்பாடுகள்மூலமாக சிறுவர்களுக்கு பதுகாப்பான இணைய தேடலை உருவாக்கி கொள்ளமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1888ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி 100 அடி கட்டிடமாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை நெளுக்குளத்தில் இலங்கைத்திருச்சபை பாடசாலை ஒன்றை ஆரம்பித்த நாளாகும். பப்ரிஸ்ட் மிஷனரி வெஸ்லியன் மிஷனரி அமெரிக்கன் மிஷனரி திருச்சபை மிஷனரிச்சங்கம் போன்றன இலங்கையின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் வவுனியாவில் திருச்சபை மிஷனரி சங்கம் பல இடங்களில் ஆரம்பப்பாடசாலை களை ஆரம்பித்தது. அதில் நெளுக்குளமும் ஒன்றாகும்.

இதற்கு முன்னோடியாக அமைந்தவர் அருட்திரு அருட்பிரகாசம் மத்தியஸ்தர் ஆவார் பாடசாலையின் வளர்ச்சியில் அருட்திரு தில்லைநாதன் சத்தியநாதன் அருட்திரு சங்கரப்பிள்ளை சோமசுந்தரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். இலங்கை திருச்சபை ஆனது மதம் பரப்ப கல்விக் கூடங்களை கருவியாக பயன்படுத்திய போதிலும் நெளுக்குளம் பாடசாலையானது எழுத்தறிவூட்ட சிறந்த கலைக்கூடமகத்திகழ்ந்தது.

இவ்வழியிலே வந்த ஆரம்பகால ஆசான்ளாக உடுவில் சீவரெத்தினம் வாத்தியார் செல்லையா வாத்தியார் போன்றோர் மக்கள் மனதில் இடம்பிடித்தவர்கள் ஆவர் . 1901ல் இன்று அருட்பிரகாசம் மத்தயதாஸ் தேவஆலயமாகத்திகழும் இடத்திற்கு பாடசாலை மாற்றப்பட்டது.

இங்கு சேவை செய்தவர்களில் மரியம்பிள்ளை அக்கா, அன்னம்பிள்ளை அக்கா, செல்லத்துரை வாத்தியார், அழகோன் வாத்தியார் போன்றோர் நெளுக்குளம் மக்கள் மனதிலிருந்து அகலாத பேராசான்களாவர்.

இவ்வளர்ச்சித்தொடரில் 1919ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் எமது பாடசாலை அரச உதவி பெறும் பாடசாலையாக அங்கீகாரம் பெற்றது.சிறுகத்தொடங்கி படிப்படியாக வளர்ச்சிபெற்ற எமதுபாடசாலைக்கு 1935ல் இவ்வூரைச் சேர்ந்த நாகமணி உடையார் ஒரு நிரந்தர கட்டிடத்தை கட்டிக் கொடுத்தார். பின் திருமதி. பொன்னம்மா ராஜரெட்ணம் தலைமையாசிரியர் பதவியை ஏற்றமை ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது. 1935-1967 வரையிலான காலப்பகுதி பாடசாலை வரலாற்றில் ஒரு நிலைக்களமான காலகட்டமாக விளங்கியதுடன் பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாகவும் விளங்கியது. இவற்றிற்கு காலம் அமைத்து கொடுத்தவாராக திருமதி. பொன்னம்மா இராஜரட்ணம் விளங்கினார். இவருடன் கல்விசார் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஆரம்பகால ஆசிரியரிடம் காணப்பபட்ட கடமை உணர்வும் சேவை மனப்பாங்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியது எனலாம்.

பின் இலவசக்கல்வி பாடசாலைகளை தேசியமயமாக்கற் கொள்கை என்பவற்றால் மாற்றம் பெற்ற பாடசாலையாக தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலகாலம் பழைய புதிய என்ற இரு இடங்களி லும் இயங்கியபின் புதிய இடத்தில் நிலைகொ ள்ளச் செய்யப்பட்டது. தேசிய மயமாக்கத்தின் பின் புதிய இடத்தில் கனிஷ்ட உயர்தர பாடசா லையாக மிளிர்ந்த எமது பாடசாலை 1978ல் க.பொ.த சாதாரண தரத்திற்கு மாணவர்களை தோற்ற வைத்தது.

இவ்வாறு படிப்படியாக வளர்ந்து வந்த எமது பாடசாலையானது 1989ல் ஆண்டு காலப்பகுதியில் சற்குணசிங்கம் தலை மையில் க. பொ. த உயர்தர வகுப்பு ஆரம்பிக்க- ப்பட்டது. இக்காலப்பகுதியில் கனிஷ்ட உயர்தர பாடசாலையாக இருந்த நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம் என்ற பெயர் சூட்டப்பட்டதுடன் இன்று பாடசாலையின் கீதமாக உள்ள கீதமும் இயற்றப்பட்டு பாடச்செ- சய்து இன்றுவரை பாடப்பட்டு வருகிறது. இவ்வாறான வரலாற்றுக்காலப்பகுதியில் 1990ல் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பல இடங்களில் தற்காலிகமாக இயங்கிவந்த பாடசாலையானது 1993ம் ஆண்டு நெளுக்குளம் கலைமகள் வித்- தியாலயத்தில் இயங்கத்தொடங்கியது.

இக்காலப்பகுதியில் பதவியை ஏற்ற திருமதி. ஆர் .ஜெயரட்ணம் தலைமையில் இடம்பெயர்ந் தோரின் வவுனியா வருகையும் எமது பாடசாலைக்கு மேலும் மெருகூட்டியது. இக்காலப்பகுதியில் 1997ம் ஆண்டு முதன்முறை- றயாக க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாண- வர்கள் பரீடசைக்கு தோற்றி சித்தி பெற்றனர. அதனைத்தொடர்ந்து பதவியை பொறுப்பேற்ற திரு. மு. ஜெயதரன் தலைமையில் 1999ம் ஆண்டு க. பொ.த உயர்தர வர்த்தகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் பரீடசைக்கு தோற்றி சித்திபெற்றனர்.

க.பொ.த கலை வர்த்தகப்பிரிவில் தோற்றிய மாணவர்களில் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்திற்கு மாண- வர்களை அனுப்பி கொண்டிருக்கும் பெருமைக்- குரிய பாடசாலையாகவும் திகழ்கின்றமை குறி- ப்பிடத்தக்கதாகும். இந்தவகையில் அதிபராக கடமையாற்றிய திரு. மு. ஜெயதரன் அவர்க- ளின் காலப்பகுதியில் எமது பாடசாலை பல்துறை வளர்ச்சி கண்டதுடன் இரண்டு மாடிக்- கட்டிடம் கொண்ட பாடசாலையாகவும் பரிணமி- த்தது. தொடர்ந்து பதவியினை ஏற்றுக்கொ ண்ட திருமதி.ப. கணேசலிங்கம் அவர்களின் தலைமையின் கீழ் மேலும் வளர்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில் 2005ம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீடசையில் வர்த்தகப்பிரிவு மாணவன் வவுனியா மாவட்டத்தில் முதலாம்தர சித்- தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்- த்ததுடன் 2006ம் ஆண்டு கலைப்பிரிவு மாணவன் மாவட்டரீதியில் 3ம் இடம்பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துக்கொடுத்தனர். அவரது பதவிக்காலம் முடிவு பெற தனது பதவி உயர்வின் நிமிர்த்தமாக 24. 02. 2008 அன்று இப்பாடசாலையை விட்டு நீங்கினார். அவரைத் தொடர்ந்து பொறுப்பேற்றுக்கொண்ட அதிபரா க திரு.க.அமிர்தலிங்கம் அவர்கள் திகழ்ந்தார். அவர்தலைமையின் கீழ் பாடசாலை மேலும் வளச்சி பெற்று சென்றுகொண்டிருந்தது என்ப- தில் ஐயமில்லை. இவரது காலப்பகுதியில் பாட- சாலையின் கல்வி மேம்பாடு பௌதீக வளங்கள் என்பனவும் அதிகரித்து காணப்பட்டதோடு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த (சா.த) க.பொ.த (உ.த) என்பனவற்றின் விகி- தாசாரங்கள் அதிகரித்துக்காணப்பட்டதோடு 2010ல் க.பொ.த உ.த மாணவர்களில் 25க்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றமை பெருமைக்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இக்காலகட்டத்தில் பலவகையான மிக முக்கிய செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.அந்தவகையில் நீர்த்தாங்கி,மதில் கட்டமைப்பு, புதிய சமையலறை, 3 மாடிக்கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்டமை, பாடசாலை முன் வாசல் அமைப்பு, மைதான அரங்கு, மலசலகூடம், மின்சாரவசதி, போன்ற பல்வேறுவகையான செயற்பாடுகள் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் அகில இலங்கை ரீதியில் சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபர் பட்டத்தையும் கௌரவ மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டமை பெருமைக்குரியதாகும். இத்தகைய வளர்ச்சிப்பாதைக்கு வழிவகருத்து அதிபருடன் தோளோடு தோள் நின்று தம் சேவைகளை சிறப்புற ஆற்றிப் பெருமை தேடித்தந்த ஆசிரியர்களும், சிற்றூழியர்களும் பாராட்டிடப்பட வேண்டியவர்கள். இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் எனவும் மாணவர்கள் நல்ல ஒழுக்கமுடையவர்களாக வளர வேண்டும் எனவும் வழிப்படுத்துவதிலும் கல்விமேம்பாடு உயர்வடைய வேண்டுமெனவும் ஆளுமைகொண்ட எமது பாடசாலைச்சமூகம் 2013.02.14 அன்று தனது 125வது ஆண்டுவிழாவை கொண்டாடியது. இவ்விழா வெகு விமர்சையாக அரசியல் குழாத்துடன் சேந்து கொண்டாடப்பட்டது. பின் 2016ம் ஆண்டு திரு.சு.அமிர்தலிங்கம் அவர்களைத்தொடர்ந்து 2016தொடக்கம் திரு.க.சிவநாதன் அவர்கள் எமது பாடசாலைக்கு அதிபராக கடமையாற்றிக்கொண்டிருக்கிறார். தொடர்ந்து இப்பாடசாலையில் கணித விஞ்ஞனப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.அதற்கான ஆசிரிய ஆளணியும் உருவாக்கப்பட்ட்து. அத்துடன் அழகியற்கூடம் **E-learning center.** நவீன சாதனங்களுடன் கூடிய 70 அடி நீளமுடைய விஞ்ஞான ஆய்வுகூடமும் 12 ஆசிரியர்கள் தங்கக்கூடிய ஆசிரியர் விடுதி என்பன அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதற்கான முன்னெடுப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எமது பாடசாலை வளர்ச்சிப்பாதையில் கொண்டுசெல்ல தற்போது அதிபராக கடமையாற்றிக்கொண்டிருக்கும் திரு.க.சிவநாதன் அவர்கள் இப்பாடசாலைக்கு தன்னை அர்ப்பணித்து சிறப்பாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். மேலும் இப்பாடசாலையானது இன்னும் பல கல்விமான்களை உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மகுடவாக்கியம் - கற்றாய்ந்து ஒழுகு.
தூரநோக்கு - அறிவும் ஆற்றலும் ஆளுமையும் ஆன்மிகப்பற்றுமுள்ள நற்பிரசைகள்.
பணிக்கூற்று - எமது பாடசாலையின் வளங்களை உச்ச பயன்பாட்டிற்கு உட்படுத்தி தேசியக்கல்வி குறிக்கோளுக்கமைய தேர்ச்சி மிகு மாணவர் சமுதாயத்தை உருவாக்குவோம்.

திருநாவுக்கரசு தர்மினி
கலைப்பிரிவு (12A)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வாழ் மக்கள் அறியவேண்டிய முக்கிய விடயம்! தவறாமல் படியுங்கள்

மனிதன் அன்றாடம் தனது வாழ்வில் பல சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. பிறந்த குழந்தைகளிலிருந்து தள்ளாடும் வயோதிபர்கள் வரை உதவிகள் எப்போது தேவைப்படும் என்பது யாரும் அறியாத விடயம்.அவ்வாறு எதிர்பாராத நேரத்தில் ஏதேனும் விபரீதங்கள் நேர்ந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? யாருக்கு அறியப்படுத்துவீர்கள்? எவ்வாறு பிரச்சினைகளை தீர்ப்பீர்கள்? இவ்வாறு பல வினாக்கள் எழும். ஏதேனும் அவசர உதவிகள் தேவைப்பட்டாலோ, விபத்துக்கள் ஏற்பட்டாலோ உடனடியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துங்கள்.

1. அவசர பொலிஸ் பிரிவு - 119
2.அவசர அதிவேக பிரிவு - 1969
3. பெண்களிற்கெதிரான வன்முறைகள் - 1938
4. அரச தகவல் பாதுகாப்பு திணைக்களம் - 1919
5. நீர் வடிகாலமைப்புச் சபை - 1939
6. போதைப்பொருள் சார்ந்த பிரச்சினைகள் - 1984
7. குடியகல்வு மற்றும் குடிவரவு - 1962
8. கல்வி அமைச்சு - 1988
9. மொழிகள் சார் பிரச்சினைகள் - 1956
10. தீயணைப்பு பிரிவு மற்றும் அம்புலன்ஸ் - 110
11. இலங்கை மின்சார சபை - 1987
12. சிறுவர் துஸ்பிரயோகம் - 1929
13. பரீட்சை திணைக்களம் - 1911
14. உயர்கல்வி அமைச்சு - 1918
15. தேசிய உதவி மையம் - 118
16. இலங்கை மின்சார சபை - 1987
17.தேசிய வைத்தியசாலை - 1959
18. விவசாயிகளுக்கான சேவைகள் - 1918
29. தொலைபேசி இணைப்பு - 112
20. விவசாயிகளுக்கான சேவைகள் - 1918
21. வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு - 011-2691500, 011-2437515
22. குற்றப்பிரிவு - 011-2691500
23. பொலிஸ் தலைமையகம் - 011-2421111
24. மின்சார தடை - 011-2466660, 011-4617575
25. அவசர சுற்றுலாத்துறை பொலிஸ் - 011-2421052
26. செஞ்சிலுவை - 011-2672727
27. விபத்து பிரிவு - 011-2693184
28. உளநலம் சார் பிரச்சினைகள் - 021 222 6666
29. சட்ட உதவி ஆணைக்குழு - 021 222 4545
30. சென்.ஜோன் அம்புலன்ஸ் சேவை - 011-2437744
31. மோசடி பணியகம் - 0112583512
32. சட்ட உதவி ஆணைக்குழு - 0112433618

தொடர்ந்தும் எதிர்பாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி வெளிச்சமிடும் முகம்



திருமதி. கௌரிஸ்வரி ஜெயச்சந்திரன்
திருநாவற்குளம்

**கற்றதும் பெற்றதும் – அழகுக்கலையில் டிப்ளோமா (34வயதில்)**
**8வருடம் தொண்டர் ஆசிரியர் பணி, சமூக பொருளாதார அபிவிருத்தியாளர் பணி,**
**councling Diploma, Special Education Diploma,**
**சைகைத் தொடர்பாடல் மொழி, Social Service Diploma**

பெண்களின் செயல் இறுதியில் தங்களின் இருப்பை உச்சத்தில் உயர்த்தி தனக்கென தனியிடம் சுயமுயற்சி போராடும் குணம் தன்னம்பிக்கை போன்றவற்றால் வெற்றியின் அலங்கரிப்புக்கள் அவர்கள் சமூகத்தில் அலங்கரித்துக்கொள்கிறது.

வாழ்க்கையை வாழ்விப்பதும் வாழ்பதுமாக வாழ்கின்ற ஒருவரின் பயணப்பாதையில் பயணிக்கப் போகிறீர்கள் என்பதற்காக மகிழுங்கள். யுத்தம் இடம்பெயர்வு மனஉளைச்சலின் வாழ்நாட்கள் போன்ற சூழலில் வாழ்ந்த ஒரு பெண்ணின் வாழ்வில் சமூக சிந்தனையும் உதவும் எண்ணமும் வெற்றிபெற வேண்டும் என்கிற துடிப்பும் எப்போதும்வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் என்பதற்கு இவரும் நல்ல உதாரணம். சமூக சூழல்பொருளாதார அபிவிருத்தியாளர் (seed) நிறுவனத்தில் தொழில்சார் பயிற்றுவிப் பாளராக இணைந்து குடும்ப பின்புலம் தையலிலும் காணப்பட்டதால் இலகுவாக பயிற்வி வகுப்புக்களை வழங்கி விசேட தேவையுடையோர்களுடன் பழகி பயிற்சிகளை வழங்கிய என்னுடைய வாழ்க்கைப்பாதையின் பயணங்களில் மறக்கமுடியாத நாட்களை நினைத்துப்பார்க்கையில் நாட்கள் நகர்வுகள் நினைவுகள் எப்போதுமே வாழ்வியலில் என்றும் வசந்தம் தான். ஆந்த பணியில் கிடைத்த அனுபவங்களின் மூலமாக விசேட தேவையுடையோர்களின் தொழில் திறன்களையும் வளர்த்து தன்னிடத்தல் காணப்பட்ட வளத்தின் உதவியுடன் பொம்மைப்பயிற்சி பைகள் பாதணிகள் அலங்காரப் பொருட்கள் போன்ற பயிற்சிகளை நானும் அதிகம் கற்று மாணவர்களுக்கு பெற்றும் கொடுத்தேன். என்று சொல்லும்போது அவர் உள்ளங்கள் அடைந்த மகிழ்வை அளவிட முடியாது. அந்த களத்தில் கிடைத்த அனுபவங்களின் அறிவாலும் சைகைத் தொடர்பாடலில் கிடைத்த சிறப்பு தேர்ச்சியாலும் சுயமாக முடிவெடுத்து சுயதொழில் முயற்சியினை விசேட தேவையுடையோர்களுடனும் பயிற்சி பெற்றவர களுடன் ஆரம்பித்த நாட்கள்தான் இன்று என்னுடைய முன்னேறும் சக்திக்கு வித்திட்டது. அத்துடன் தன்னுடன் பயிற்சிபெற்றவர்கள் வெறுமனே பயிற்சியாக மட்டும் கருதாது தங்களுடைய வருமானம் பெறும்வழிமுறையாக மாற்றி வேறு இடங்களில் வேலைசெய்து தங்கள் அடையாளங்களை தக்க வைத்துக்கொள்வது அவரின் பயிற்சி வழங்குவதற்கு கிடைத்த அடைவுமட்டமாகும்.



**கடந்து வந்த சில ஞாபகங்கள்**

- ☑ சமூகத்தில் தனக்கென ஒரு அங்கீகாரம் தேவை என்ற யோசனை.
- ☑ என் திறமையை விதைத்தேன்.
- ☑ விசேட தேவையுடையோர்களின் விசேட திறனை கண்டு பிரமித்தேன்.
- ☑ என்னைப்போல் குடும்ப பின்னணியில் பின்தங்கி இருந்தவர்களை வாழ்வில் முன்னேற்றும் நோக்கத் துடன் உருவாக்கினேன்
- ☑ சொந்த ஊரில் வாடகைக்கு கடையொன்றை நடாத்தி பலதடைகளைத் தாண்டி எனது தொழில் முயற்சியை கொண்டு சென்றேன்.
- ☑ பிரதேச செயலகத்தில் UNDP யின் உதவியுடன் நிறுவனத்தை பதிவுசெய்தேன்.
- ☑ 2016 ஆனி மாதம் 9ம் திகதி புதிய இடமும் 238000/= பெறுமதியான உதவிகளை வழங்கினார்கள்.
- ☑ பல சவால் களைக்கடந்து விற்பனையின் வளர்ச்சிகள் வளர மொத்த வியாபாரிகளின் கொள்வனவு வருகையும் அதிகரித்து எனது உற்பத்திகள் பல இடங்களுக்கும் செல்ல எனது வியாபாரம் சிறப்பாக பயணித்துக்கொண்டிருக்கிறது.
- ☑ என்னுடைய வளர்ச்சிக்கு உதவியவர்களுக்கும் என்னோடு சகபணியாளராக தொழில்புரியும் விசேட தேவையுடையோர்க்கும் எனது ஊழியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் சொல்லி தனது வந்த நினைவுகளை பகிர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் பார்வையில் - கொழும்பு நாகரீகத்தை மையப்படுத்திய தயாரிப்புக்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்ட சூழலில் தமிழ் கலாசாரத்திற்கேற்ப நமது வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப தரமாக நேரடியாக மக்களின் பார்வையில் உற்பத்தி செய்வதால் மக்களின் மனதில் வென்று நிற்கிறது.

தடைகளை வென்றவரின் சொல் - என்னுடைய பயணங்கள் பல சவால்களை சந்தித்தாலும் சமூக சிந்தனை சுயமுயற்சி என்படைப்பாற்றல் சமூகத்தின் மீதான பேரன்பை நான் எப்போதும் நேசித்தேன். நான் மட்டும் வளர்வது வளர்ச்சியல்ல என்னோடு இருப்பவர்களும் வளர்தலே வளர்ச்சியாகும்.

என் தொழில் புதியது. நான் என்றும் தனிக்காட்டு ராஜாதான். நிரந்தரமான ஒரு இடத்தை தேடிப்பிடிப்பது தான் சின்னத்தடையாக இருந்தாலும் அந்த தடைகளையும் தகர்ப்பேன் தடம்பதித்து கொண்டிருப்பேன். என்றாகிறார் கௌரீஸ்வரி

**வீழ்வதற்காக யாரும் பிறக்கவில்லை**
**வாழ்வதற்காகவே பிறந்தோம்.**

தொகுப்பு
-அருளானந்-


# BHAKIRATHAN COMPUTER CENTRE

NO 26 "A", KATKULY, VAVUNIYA

GOV REG NO:-3577

T.P : 024-2221491 / 077-9599251



bhaki1986@gmail.com

LEMANATING,CD OR DVD WRITING

TOSHIBA HEAVYDUTY USED COPIER SUPPLY (WORRANTY OR WITHOUT WORRANTY

A3 COLOUR SCAN RS-10/=
A4 PHOTOCOPY RS-3/=(UP TO TEN)
A4 COLOUR PRINT RS -10/=(UP TO TEN)
A4 LASER PRINT RS -3/=(UP TO HUNDRED)

ALL TYPE OF COPIER TONER AND SPARES,
PRINTER REPARING AND TONER

RICOH BLACK & WHITE TONER
(HIGH QUALITY) 500g : Rs 3,000.00

RICOH COLOUR TONER (HIGH QUALITY)
150g : Rs 3,000.00 X 4

RICOH, TOSHIBA PAIR PARTS & TONER





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் தந்த பரிசு...



சில வருடம் பின் இன்று நான் பிறந்த வீட்டிற்கு சென்று கொண்டிருக்கின்றேன். எத்தனை அழகு என் ஊர். ஊரின் பெயரைப் போலே எம் சுற்றமெல்லாம் சோலை ஆம் அதுவும் மாஞ்சோலை. அழகிய வீட்டில் நானும் என் அன்னையும் அதிகம் வீட்டில் இருப்பது வழக்கம் அழகிய காலம் அது. மேல்படிப்புக்காய் சிலவருடம் வெளியூரே கதியாகிப்போன எனக்கு இன்று விடிவுகாலம்.

எத்தனை முனகல்கள், எத்தனை சலங்கை ஒலிகள், எத்தனை உறவினர் குரல்கள் என் வீட்டில் ஒலித்துக்கொண்டே இருக்கும். அந்த எம் பெரிய அரண்மனையில் பத்து வயது நிரம்பிய எனக்கு அடிக்கடி ஓடிச்சென்று வாசல் பார்ப்பது வழக்கமாகிப்போன ஒன்று. சிறுவயதானதால் என் அன்னைக்கு நான் வாசல் பார்க்கும் வால்குட்டி. அடிக்கடி அழைக்காமல் விருந்தாளிகள் வருவார்கள் என்பதால் அழகான வழக்கமான வேலையாகிப்போகும் அது. அழகாக சிரித்து வரவேற்பாள் என்று வருவோரும் பொய் சொல்வர் அப்போது.

எத்தனை அழகான காலம் அது எத்தனை சிட்டுக்கள் என் தோட்டம் தேடிவரும். என் மாஞ்சோலைக்கு மந்திகள் கூட வரும். அன்னையின் அரவணைப்பில் சோலை யெல்லாம் சுற்றிவிட்டு சோர்வுடன் என் அன்னை மடியில் தூங்கிய காலமெல்லாம் எண்ணி எண்ணி சோர்ந்து தான் போனேன் நான்.

இப்போது அன்னை என் வருகைக்காய் காத்திருப்பாள் என்னைப்போல் வாசலிலும் பார்த்திருப்பாள்.

அன்னை சொல்லியிருக்கிறாள் முன்புபோல் தோட்டமும் இங்கில்லை... மாஞ்சோலையும் இங்கில்லை . மந்திகளும் வருவதில்லையாம். என் அரண்மனையில் கூட ஆங்காங்கே துவாரங்களும் உண்டாம். எப்படி இருக்கும் என் முதல் சுவாசம் என் வீட்டில் புது அனுபவமாகும்போல

என் வீடு வந்தது அன்னையும் என்னை கட்டியணைத்து அரவணைத்து என்னை அரண்மனைக்குள்ளே அழைத்துச் செல்கிறாள்.

ம்.... பலமான பெருமூச்சு எனக்கு ம்.... அம்மா அப்பா எப்போ வருவார். வாறண்டுதான் சொன்னவர் இப்ப வருவார் என்று சொல்லி முடிப்பதற்குள் என் வேலிப் படலை சத்தம் காதை எட்டியது. அதற்குள் அன்னை கீதா வாசலைப் போய் பார்..... ம்.... அப்பாதான் அம்மா வாறார். அதுக்குள்ளே பாத்துட்டியா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை வந்து என்னை அணைத்து
கண்ணீர் சொரிகிறாள். அம்மா இப்போது
தடையல்ல படலை பார்க்க. எனக்கு வாசல்
வரைகூட போகத்தேவையில்லை.
என்னில் காணாமல் போன
காலிற்காய் வந்த சுழல் கதிரையின்
அளவிலேயே என் வீட்டில் துவாரம்.



என்னால் எழும்ப முடியாட்டியும்
துவாரம் வழிபார்க்க ஏதுவாய்
மாஞ்சோலைகளும் தோட்டங்களும்
இல்லை இங்கு. என்ன ஒன்று
அன்று விழிகள் சிரித்து உதடு
வரவேற்கும்.
இன்று உதடு அழைத்து கண்ணீர்
வரவேற்கிறது.

இது யுத்தம் எனக்கு தந்த பரிசு...
நி.முகிந்தன் (முகி)

## குழந்தைகளுக்கு தண்ணீர் ஏன் அவசியம்

தண்ணீரை நாம் எவ்வளவு அருந்தவேண்டும்? என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நாம் தினமும் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். நம் குழந்தைகளையும் நிறைய தண்ணீர் குடிக்க வைக்க வேண்டும். இதனால் நமக்கு வரும் பல்வேறு வகையான வியாதிகள் தடுக்கப்படுகின்றது. நாம் குடிக்கும் தண்ணீர் மூன்றுகூறுகளாக பிரிக்கப்படுகின்றது. அதில் மிவும் பருமனான சத்து சிறுநீராக வெளிப்படுகின்றது. நடுநிலையான சத்து இரத்தத்தில் சேர்கிறது. நுட்பமான சத்து உயிராகிறது என உபநிடத உபதேசம் கூறுகிறது. கொதிக்க வைத்துப் பின்னர் ஆறவைத்து வடிகட்டி குடிக்கும் தண்ணீர் சிறந்ததாகவே விளங்கு கிறது. கொதிக்க வைத்த நீரில் குளிர்ந்த நீரைக்கலப்பதும் ஆற்றிக்குடிப்பதும் தவறு. சுடவைக்கப்பட்ட நீர் தானாக ஆறிய பிறகே குடிக்க வேண்டும் இப்படி சுடவைத்து ஆறிய தண்ணீரை வெறும் வயிற்றில் 6டம்ளர் குடித்து விட்டு சுமார் ஒரு மணி நேரம் வரை டீ,காபி போன்ற பானங்கள் குடிக்காமல் இருந்தால் 85சதவீத நோய்கள் விலகுவதாக யுனெஸ்கோ ஒரு ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## தண்ணீர் குடிப்பதால் வரும் நன்மைகள்

மலச்சிக்கல் நீங்கும், கணைய சுரப்பிகள் நன்கு இயங்கும். இன்சுலின் அதிகம் சுரக்கும். சர்க்கரை வியாதி குறையும். சிறுசீரகங்கள் சுறுசுறுப்பாக இயங்கும். ஸ்டீராய்டு மாத்திரை சாப்படுவதால் வரும் பக்க விளைவுகள் விலகும். உப்பு நிறைய இருந்தால் குறையும். நீர் பருகுவதனால் குடல் சுத்தமாகும். இரத்த ஓட்டம் சீராக இயங்கும், நோய் எதிர்ப்பு சக்தி கூடும். இத்துடன் சிறுநீரகக் குழாய்நோய்கள், வயிற்றுப்பொருமல், சோகை, பக்கவாதம், தலைவலி, மூட்டுவலி, இருமல், இதயப் படபடப்பு, போன்றன விலகும். குளோரின் கலந்த நீரைப் பருகுவதன் மூலம் மலச்சிக் கலைத் தவிர்க்கலாம்.


# வேலைவாய்ப்பு

அரச மற்றும் தனியார் வேலைவாய்ப்புக்களை உங்கள் மொபைலில் பெற

**REG <இடைவெளி> JOBS** என டைப் செய்து **77010** க்கு **SMS** அனுப்புங்கள்.

Dialog HUTCh


DIALOG, HUTCH CUSTOMERS ONLY.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டோஷோப் போன்ற மென்பொருட்களில் வேலை செய்யும் போது print செய்ய வேண்டிய பேப்பரின் அளவினை சரியாக தெரிவு செய்யாவிட்டால் விளைவு மிகவும் மோசமாகிவிடும்!





பொதுவாக "inch" or "mm" களை பயன்படுத்துவர். pixel (ex:1366x768) களில் வேலை செய்யும் போது DPI இனையும் கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டும் (Dot Per Inch).
சாதாரண புகைப்படங்கள், விளம்பர அட்டைகள் எனில் 120DPI ம் பெரிய அளவிலாயின் 96DPI ம் மிகப்பெரிய அளவாயின் 76DPI ம் பயன்படுத்தலாம்.

DPI அதிகரித்தால் படத்தில் தெளிவு அதிகமாகும் குறைவடைந்தால் தெளிவும் குறைவடையும். (படத்தினை சூம் (zoom) செய்து பார்க்கும் போது வித்தியாசத்தினை காணலாம்) பெரிய படமாயின் 76DPI போதும் என குறிப்பிட்டுள்ளேன். காரணம் உதாரணமாக ஒரு சுவர் அளவுள்ள பிரம்மாண்டமான படத்தை யாரும் அருகே வந்து பார்க்கப்போவத்தில்லை! அத்துடன் பெரிய படங்களை 120DPI இல் செய்ய 2GB Ram போதாது கணிணி load ஆகிவிடும்.

| Size | Height x Width (mm) | Height x Width (in) |
|---|---|---|
| 4A0 | 2378 x 1682 mm | 93.6 x 66.2 in |
| 2A0 | 1682 x 1189 mm | 66.2 x 46.8 in |
| A0 | 1189 x 841 mm | 46.8 x 33.1 in |
| A1 | 841 x 594 mm | 33.1 x 23.4 in |
| A2 | 594 x 420 mm | 23.4 x 16.5 in |
| A3 | 420 x 297 mm | 16.5 x 11.7 in |
| A4 | 297 x 210 mm | 11.7 x 8.3 in |
| A5 | 210 x 148 mm | 8.3 x 5.8 in |
| A6 | 148 x 105 mm | 5.8 x 4.1 in |
| A7 | 105 x 74 mm | 4.1 x. 2.9 in |
| A8 | 74 x 52 mm | 2.9 x 2.0 in |
| A9 | 52 x 37 mm | 2.0 x 1.5 in |
| A10 | 37 x 26 mm | 1.5 x 1.0 in |

Vaijayanth & Latheep
ASSISTIA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரத நிலைய நேர அட்டவணை

**Direct Trains**

| Your Station | Arrival Time | Departure Time | Destination / Time | End Station / Time | Frequency | Name | Type |
|---|---|---|---|---|---|---|---|
| VAVUNIYA | 02:09:00 | 02:13:00 | KANKESANTHURAI 06:05:00 | JAFFNA 05:10:00 * | DAILY | Night Mail Train | Night Mail Train |
| **Available Classes:** 2nd Class , 3rd Class | | | **Train ends at** KANKESANTHURAI at 06:05:00 | | | **Train No:** 4089 | |
| VAVUNIYA | 10:05:00 | 10:08:00 | KANKESANTHURAI 12:17:00 | JAFFNA 11:51:00 | DAILY | A.C. - INTERCITY | A.C. - INTERCITY |
| | | | **Train ends at** KANKESANTHURAI at 12:17:00 | | | **Train No:** 4021 | |
| VAVUNIYA | 11:45:00 | 11:47:00 | KANKESANTHURAI 15:20:00 | JAFFNA 14:37:00 | DAILY | YAL DEVI | LONG DISTANCE |
| **Available Classes:** 2nd Class , 3rd Class | | | **Train ends at** KANKESANTHURAI at 15:20:00 | | | **Train No:** 4077 | |
| VAVUNIYA | 16:23:00 | 16:25:00 | KANKESANTHURAI 18:47:00 | JAFFNA 18:15:00 | DAILY | uttara devi | INTERCITY |
| **Available Classes:** 2nd Class , 3rd Class | | | **Train ends at** KANKESANTHURAI at 18:47:00 | | | **Train No:** 4017 | |

| Your Station | Arrival Time | Departure Time | Destination / Time | End Station / Time | Frequency | Name | Type |
|---|---|---|---|---|---|---|---|
| VAVUNIYA | 03:35:00 | 03:35:00 | COLOMBO FORT 10:20:00 | COLOMBO FORT 10:20:00 | DAILY | Rajarata Rejini | EXPRESS TRAIN |
| **Available Classes:** 2nd Class , 3rd Class | | | **Train ends at** COLOMBO FORT at 10:20:00 | | | **Train No:** 4086 | |
| VAVUNIYA | 05:40:00 | 05:45:00 | COLOMBO FORT 10:36:00 | COLOMBO FORT 10:36:00 | DAILY | INTERCITY | INTERCITY |
| **Available Classes:** 1st Class , 2nd Class , 3rd Class | | | **Train ends at** COLOMBO FORT at 10:36:00 | | | **Train No:** 4004 | |
| VAVUNIYA | 08:07:00 | 08:10:00 | COLOMBO FORT 13:05:00 | COLOMBO FORT 13:05:00 | DAILY | UTTARA DEVI | INTERCITY |
| **Available Classes:** 2nd Class , 3rd Class | | | **Train ends at** COLOMBO FORT at 13:05:00 | | | **Train No:** 4018 | |
| VAVUNIYA | 12:26:00 | 12:28:00 | COLOMBO FORT 18:32:00 | COLOMBO FORT 18:32:00 | DAILY | YAL DEVI | LONG DISTANCE |
| **Available Classes:** 1st Class , 2nd Class , 3rd Class | | | **Train ends at** COLOMBO FORT at 18:32:00 | | | **Train No:** 4078 | |
| VAVUNIYA | 15:34:00 | 15:36:00 | COLOMBO FORT 20:05:00 | COLOMBO FORT 20:00:00 | DAILY | INTERCITY | A.C. - INTERCITY |
| **Available Classes:** 1st Class | | | **Train ends at** COLOMBO FORT at 20:05:00 | | | **Train No:** 4022 | |
| VAVUNIYA | 21:51:00 | 21:53:00 | COLOMBO FORT 04:05:00 | COLOMBO FORT 04:05:00 | DAILY | Night Mail | Night Mail Train |
| **Available Classes:** 1st Class , 2nd Class , 3rd Class | | | **Train ends at** COLOMBO FORT at 04:05.00 | | | **Train No:** 4090 | |

# "வெளி" சஞ்சிகையின் பரிசுப் போட்டி

**இலங்கையின் முதலாவது தமிழ் பத்திரிக்கை வெளிவந்த ஆண்டு என்ன?**
**MSS (Space) விடையினை TYPE செய்து உங்கள் பெயர் முகவரியுடன்**
**0770549218 எனும் இலக்கத்திற்கு அனுப்பி பரிசுகளை வெல்லுங்கள்**

குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 10 வாசகர்களுக்கு மாத்திரமே



## எமது சென்ற இதழின் வெற்றியாளர்கள்

பவித்திரன் – கற்குழி
வக்சலா – செட்டிகுளம்
பிரசன்னா – சுந்தரபுரம்
தனுசிகன் – கூமாங்குளம்
நாதன் – தோணிக்கல்
குகதாஸ் – பூவரசங்குளம்
தினேஸ்குமார் – வைரவபுளியங்குளம்
சாருஜன் – பூவரசங்குளம்
கிருஸ்ணா – கூமாங்குளம்
வினோதினி – தவசிகுளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி - 25

கிறிஸ்மஸ் என்றவுடன் எல்லோருக்கும் முதலில் நினைவுக்கு வருவது கிறிஸ்துவ நண்பர்கள் வீட்டிற்கு சென்றால் Cake, தடபுடல் விருந்துதான். ஆனால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் தொடங்கிய பின்னணியும், அதில் ஏற்பட்ட பல மாறுதல்கள் குறித்தும் பலருக்கும் தெரியாது. இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினம்தான் கிறிஸ்மஸ் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால் இயேசுநாதர் எப்போது பிறந்தார், கிறிஸ்மஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது. கிறிஸ்துமஸ் என்ற வார்ததை "கிறிஸ்ட் மாஸ்" என்ற 2 வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாக தெரியவில்லை என்பதால், கிமு 7க்கும் கிமு 2க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். அதேபோலவே யூதர்களின் பருவகாலம், நாள் காட்டிகள் மூலம் கணக்கிட்டு, ஒரு யூக அடிப்படையில் தான் டிசம்பர் 25ம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகையாக கொண்டாடப்படுவதாக சிலவரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ்துமஸ் பண்டிகையை முதன் முதலில் 4ம் நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்று குறிப்புகள் உள்ளன. ஆனால் வேறு சில பிரிவுகளை சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து, ஜனவரி 6ம் தேதி இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர். எப்படி இருப்பினும் கிறிஸ்துமஸ் பண்டிகை என்பதை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்கின்றனர். இந்தத் தினத்தை கிறிஸ்துவர்கள் விசேஷமாக கருதுவதால் அன்றைய தினம் பல புதிய பணிகளைத் தொடங்குவதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். கிபி 800ம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று, சார்லிமேனி என்ற பேரரசன் மன்னராக பதவியேற்றான். அதன்பிறகு கிபி 855ம் ஆண்டு .இட்முண்ட் என்ற தியாகி மன்னராக மூடி சூட்டப்பட்டான். கடந்த 1066ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் வில்லியம் 1 ம் மன்னராக முடிசூட்டப்பட்டார். மேலும் 1377 ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ரிச்சார்ட் கிறிஸ்துமஸ் பண்டிக்கையை மிக விமர்சியாக கொண்டாடினார்.

கடந்த 1643ம் ஆண்டு இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு "கிறிஸ்துமஸ் தீவு" என்று பெயரிடப்பட்டது. இப்படி கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்டு மக்களிடையே பிரபலமடைந்து, பின்னர் உலகமெங்கும் விமரிசையாக கொண்டாடும் வழக்கம் உருவானது. கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள பரிசுப் பொருட்களை பரிமாறி கொள்வதும்,போட்டிகளை நடத்துவது என்று பல கோணங்களில் கொண்டாட்டம் விரிவடைந்தது.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக முதன் முதலில் கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் வழக்கம், 1510ம் ஆண்டும் ரிகா என்ற இடத்தில் துவங்கியது. கடந்த 1836ம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு அலபாமா என்ற பகுதியில் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. 1840ம் ஆண்டு இங்கிலாந்தில் முதன் முதலாக கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் துவங்கியது. கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது கிறிஸ்துவர்கள் குழுக்களாக சேர்ந்து கேரல் சர்வீஸ் என்ற நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

இந்த கேரல் நிகழ்ச்சியில் குழந்தை இயேசுவை வாழ்த்தியும், அவரது பிறப்பு, அவர் உலகில் வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துகளை கொண்ட பாடல்கள் பாடப்படுவது வழக்கம். கடந்த 1847ம் ஆண்டு பிரான்சில் தான் முதல் முதலாக கிறிஸ்மஸ் கேரல் சர்வீஸ் நடத்தப்பட்டதாக தெரிகிறது.

இந்த கேரலில் "ஓ ஹோலி நைட்" என்ற பிரபல கிறிஸ்துமஸ் பாடல் பாடப்பட்டதாக கூறப்படுகிறது. கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டி வரலாற்றில் சில ருசிகரமான சம்பவங்கள் நடைபெற்று உள்ளன. பண்டைய காலத்தில் வாழ்ந்த பாரசீகர்களும், பாபிலோனியர்களும் கிறிஸ்துமஸ் பண்டிகையை வருடத்தின் நல்ல நாளாக கொண்டாடி வந்தனர். கிறிஸ்மஸ் பண்டிகை அன்று, பாரசீக நாட்டில் உள்ள எல்லா அடிமைகளுக்கும் ஒருநாள் விடுதலை அளிக்கப்படும். மேலும் சிலர் தங்கள் அடிமைகளை பரிசாக பரிமாறி கொண்டனர். சில எஜமான்கள் கிறிஸ்மஸ் பண்டிகை அன்று மட்டும், அடிமைகளுக்கு வீட்டில் முழு சுதந்திரம் கொடுத்ததாகவும் வரலாற்றில் குறிப்புகள் உள்ளது. பண்டைய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்கு பேய், பிசாசு, அசுத்த ஆவிகள் உள்ளிட்டவைகளுக்கு அதிகமாக பயந்தனர். வருடத்தில் நீண்ட இரவு கொண்ட நாட்களில் அவை மக்களுக்கு தீமை விளைவிக்கும் என்று நம்பினர். இதனால் நீண்ட இரவுகளுக்கு பிறகு சூரியன் உதிக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடி வந்துள்ளனர். மொத்தத்தில் நல்லது ஓங்கவும், அல்லது அழியவும் இந்த நன்னாளை உலக மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இயேசு பெருமானை இறைஞ்சி, துதி பாடி மகிழ்கின்றனர் என்பது சந்தோஷமான விடயந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வெளி" வாசகர்களுக்கு Assistia வழங்கும் பரிசு



**நீங்கள் Dialog அல்லது Hutch பாவனையாளரா?**
**இன்றே எமது சேவையை பதிவு செய்வதுடன் பரிசுகளை அள்ளிச்செல்லுங்கள்**

- 1st Price Rs.2000 Reload
- 2nd Price K7 Antivirus & T-Shirt
- 3rd Price Rs.1000 Vouchers

**REG <இடைவெளி> GET என டைப் செய்து 77007 க்கு SMS அனுப்புங்கள்**

பண்டிகைகால பரிசுகளை பெற்றுக்கொள்ளுங்கள்.
வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தெரிந்தெடுக்கப்படுவார்கள்
இச்சலுகை 01 தை 2017 வரை மாத்திரமே செல்லுபடியாகும்.

சென்ற மாத இதழில் வெற்றி பெற்றவர்கள் விபரம் :
1ம் பரிசு : G.Nishanth
2ம் பரிசு : N.Nishanthan, K.Priya
மூன்றாம் பரிசு : Varun, Jeryluxshigan, Kajinthan, S.Kamalarubam, G.Kabisha, Sivalackshan, Haseel, Kirubaavathani, T.Premakala, M.Sharukan, Vijayenthiran, G.Yuvarajah, M.Poothapari, K.Nishanthika, K.Sulacshan

எமது வாசகர்களே வவுனியா மண்ணிலிருந்து வெளிவருகின்ற எமது மண்ணின் புதிய படைப்பான "வெளி" சஞ்சிகை தங்களது கைகளில் தவழ்வதை இட்டு மனமகிழ்வு கொள்கிறோம். எமது வளர்ச்சியில் வாசகர்களாகிய தமது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் மற்றும் ஆக்கங்களையும் வரவேற்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

facebook.com/வெளி-செயற்பாட்டு-இளைஞர்கள்

"வெளி" செயற்பாட்டு இளைஞர்கள்
#187/10, ஆலடி வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

தொடர்புகளுக்கு : 076 7280 998
076 9018 359



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடல் காஸ்ட்ரோ

ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியும், விடுதலைப் பெற்ற நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றும் பகைவர்களின் இடை விடாத அழிப்பு வேலைகளிலிருந்து காத்தும் 32 ஆண்டு காலமாக ஈடுஇணையில்லாத தொண்டாற்றிய பெருமைக்குரியவர் பிடல் காஸ்ட்ரோ. சின்னஞ்சிறிய கியூபா நாட்டினை சர்வதிகார ஆட்சியிலிருந்து மீட்பதற்காக போராடிய பிடல் காஸ்ட்ரோவும் அவரது அற்புதமான தோழன் சேகுவேராவும் உலக வரலாற்றில் உன்னதமான இடத்தை பெற்று ள்ளனர். காஸ்ட்ரோவின் ஆட்சியை கவிழ்க்கவும், அவரைப் படுகொலை செய்ய வும் அமெரிக்க வல்லரசு இடைவிடாது முயற்சி செய்தது. உலக வல்லரசான அமெரிக்காவின் நயவஞ்சகத்தை பிடல் காஸ்ட்ரோ வெற்றிகரமாக முறியடித்தார். இதன் விளைவாக நடுநிலை நாடுகளின் நாயகராகப் போற்றப்பட்டார். கியூபாவின் அதிபரான பின்னும் எளிமையான மக்கள் தொண்டராகத்தான் அவர் திகழ்ந்தார். இன்னமும் திகழ்கிறார். இவருடைய வழிகா ட்டலில் இலத்தீன் அமெரிக்க நாட்டு மக்கள் விழிப்புணர்வைப் பெற்றனர். அதன் விளை வாக இந்நாடுகளில் இருந்த பிற்போக்கு ஆட்சிகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந் தெழுந்து போராடி ஜனநாயக அரசுகளை அமைத்துக்கொண்டனர். கியூபா நாட்டின் அதிபர் பதவியில் இருந்த பிறகு தாமாகவே முன்வந்து பதவியைத் துறந்ததின் மூலம் அவருடைய புகழ் மேலும் பலமடங்கு உயர்ந்துள்ளது.



தென் ஆபிரிக்க நாட்டின் விடு. தலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திய நெல்சன் மண்டேலா நாட்டின் முதல் குடியரசுத் தலை வராகப் பொறுப்பேற்றார். ஆனாலும் மறு முறை அந்தப் பதவியை வகிக்க விரும்பவில்லை. தாமாகவே முன் வந்து பதவியைத் துறந்த அவரை இன்னமும் தென்னாப்பிரிக்க மக்கள் தங்களின் பாசத்திற்குரிய தேசத் தந்தையாகப் போற்றுகிறார்கள். பிடல் காஸ்ட்ரோவின் இந்தப் பதவி துறப்பு உலக நாடுகளில் உள்ள பல்வேறு நாட்டுத் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கும் என நம்புகிறோம். எத்தனை வயதானாலும் பதவியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விடமறுக்கும் இன்றைய தலைவர் கள் பலருக்கு நடுவில் பிடல்




Graphic Desiging
Typing Works
Tamil
English
Sinhala
Video Editings
077 914 8718

# JEYAM MOTORS

**Bajaj, TVS Original Spares Parts**

BAJAJ TVS

#61A, SoosaipillaiyarKulam Rd, Vavuniya. 024 561 7001

# AkAsh GRAPHICS



High Quality
Digital Printing

Roland

## Akash Graphics

111 Bus Stand Complex, Vavuniya, Sri Lanka.
Tel : 0094 777 804964 | 076 6672384 | akashgraphicsvauniya@gmail.com

# Electronic Repairing

All Type TV | DVD PLAYER | RADIO
SPEAKERS | PROJECTOR

Panasonic SONY LG Pioneer SAMSUNG

#70/2, Station Rd, Vairavapuliyankulam, Vavuniya
(Opposite Aathivinayakar Kovil)

077 673 5908




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IDM NATIONS CAMPUS

IDM Nations Campus Since 1981

## MERIT SCHOLASHIP EXAM OFFER - 2016



**O/L & A/L**
**School Leavers**
**Job Seekers**
**Employees**

Exam Registration Deadline
20-12-2016
Exam Registration Fee
Rs.100/-
Questions Method
(MCQ)

**Exam Date** 24-12-2016
**Exam Time** 10.00 AM

Age Limit
Above 15 Years

**Areas**
General Knowledge
Computing
Maths



MORE THAN 90 MARKS CAN GET MERIT SCHOLARSHIP

Registration Available On Our Branch

#19, Vairavar kovil Road,
Vairavapuliyankulam, Vavuniya
077 111 8446 | 024 222 2313

பிறக்கவிருக்கும் ஆண்டில் தங்களின்
பொருட்கள் மற்றும் சேவையினை
விளம்பரப்படுத்துவதற்கு...

MSS







- Poster Campaign
- Hand Bills Issuing
- Door To Door Campaign
- Web Designing
- Banners & Boards & Visualisation
- Video & Magazine Advertising

விளம்பரத்துக்காக வீணாக
பணம் செலவளிக்கிறீர்களா..?

உங்கள் விளம்பரங்கள்
நாளாந்தம் குறைந்தது
500 பார்வையாளர்களை
சென்றடைய வேண்டுமா..?

வேலைக்கு ஆட்கள் தேடுவதற்கு
வீடுகளை விற்பனை செய்ய
மற்றும் வாடகைக்குபெற

076 7280996
077 2831809
077 9148718

mssadvertising@gmail.com
Mss advertisting

#23/89 Anna Road, thonikal, vavuniya


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ் - කිරුබා ලර්නර්ස්

## *Goverment Approved No.1 Driving School*

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை.
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி.
- தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி.
- இரவு நேரவாகனப்பயிற்சி. (6.00P.m - 9.00P.m)



# கிருபா லேணர்ஸ்

## அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

இல-216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்)

024 222 7777 077 710 0444



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org